பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விடியல் 04 வள்ளுவர் ஆண்டு 2050 பங்குனி 20 வியாழக்கிழமை 02.04.2020 கதிர் 148

**இது ரகசியம் அல்ல!**

'நாடாளுமன்றத்தை மீளக் கூட்டுவதாயின் அதற்காக 225 உறுப்பினர்களும் ஒன்றாக சபையில் பிரசன்னம் கொடுத்திருக்கத் தேவையில்லை. இன்றைய கொரோனா பரவும் நெருக்கடியில் அப்படிக் கூடுவதும் ஆபத்து. உறுப்பினர்கள் பக்கம் 02 »

## சுவிஸ் போதகருடன் நெருக்கமான

# மேலும் மூவருக்கு யாழில் கொரோனா!

## நேற்று நடந்த பரிசோதனையில் உறுதி

யாழ்ப்பாணம், ஏப். 02

**சுவிற்சர்லாந்தில் இருந்து யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதிக்கு வந்து ஆராதனை நடத்திய போதகருடன் நெருங்கிய தொடர்பைப் பேணிய மேலும் மூவருக்கு யாழ்ப்பாணத்தில் கொரோனா தொற்றுள்ளமை நேற்று உறுதியாகியது.** பக்கம் 02 »

## ஜனாதிபதியுடன் நேற்று ஐ.தே.கவினர் சந்திப்பு

கொழும்பு, ஏப். 02

கொரோனா வைரஸ் பரவலுடன் நாட்டில் உருவாகியுள்ள நிலைமை குறித்து அரசுக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் நேற்று சிறப்புக் கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பில் ஜனாதிபதி ஊடகப் பிரிவு அனுப்பிவைத்த செய்திக் குறிப்பில் பக்கம் 04 »

## உள்ளூராட்சி நிதி நிவாரணத்துக்கு பயன்படுத்தலாம்

ஆளுநருக்கு சுட்டிக்காட்டினார் சி.வீ.கே.



யாழ்ப்பாணம், ஏப். 03

உள்ளூராட்சிசபைகளின் ஊடாக இடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியுதவி யளிக்கலாமென்பதை வடக்கு ஆளுநருக்கு சுட்டிக்காட்டியுள்ளார் வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம்.

அவர் நேற்று ஆளுநருக்கு அனுப்பிய கடிதத்தில் – பக்கம் 02 »

## வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட முதியவர்!

கொரோனாவால் உயிரிழந்தாரா?

கொழும்பு, ஏப். 03

கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழந்தார் என சந்தேகிக்கப்படும் ஒருவரின் சடலம் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கஹதுடுவ சுகாதார மருத்துவ அதிகாரி அலுவலகம் இந்தத் தகவலை தெரிவித்துள்ளது.

கொழும்பு, மேட்டெகொட வீட்டுத்திட்டத்தில் வசிக்கும் 67 வயதான ஒருவரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார். பக்கம் 02 »

## சுகாதாரப் பரிசோதகர்களின் அனுமதியின்றி தனிமைப்படுத்தப்பட்டோருக்கு உதவ தடை!

வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அறிவிப்பு



யாழ்ப்பாணம், ஏப். 03

யாழ்ப்பாணத்தில் புதிதாக இனங்காணப்பட்டுள்ள மூன்று கொரோனா நோயாளிகளும் வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதியில் வசித்துள்ளமையால் அந்தப் பகுதிகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர்களுக்கான உதவிகளை வழங்கும்போது சுகாதாரப் பரிசோதகர்களின் அனுமதி கட்டாயம். பக்கம் 02 »

## இடர் நிவாரணப் பணிகளுக்கு மாவை 5 லட்சம் ரூபா உதவி!



தொடரும் கொரோனா தொற்று அபாயம் மற்றும் ஊரடங்கு என்பவற்றினால் பாதிக்கப்பட்ட நாளாந்த வருமானமீட்டும் குடும்பங்களுக்கு உதவிகளை வழங்குவதற்காக முன்னாள் பக்கம் 02 »

## ஏப்ரல் 2,3,6 ஆம் திகதிகளில் மருந்தகங்கள் திறக்கப்படும்

கொழும்பு, ஏப். 02

அவசர தேவைக்குரிய மருந்துகளைப் பொதுமக்கள் பெற்றுக்கொள்வதற்கு வசதியாக இன்று வியாழக்கிழமை, நாளை வெள்ளிக்கிழமை மற்றும் 6ஆம் திகதி திங்கள் கிழமை ஆகிய தினங்களில் அனைத்து மருந்தகங்களையும் திறப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது. பக்கம் 02 »

இலங்கையை உலுக்கும் கொரோனா;

## மூன்றாவது நபர் உயிரிழப்பு!

கொழும்பு, ஏப். 02

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகிச் சிகிச்சை பெற்று வந்த 72 வயதுடைய நபர் ஒருவர் நேற்று பின்னிரவு உயிரிழந்துள்ளார்.

இதன்மூலம் இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3ஆக அதிகரித்துள்ளது.

மருதானையைச் சேர்ந்த 73 வயதான இஸ்லாமியரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

ஸ்ரீஜயவர்தனபுர வைத்திய சாலைக்குச் சுகவீனம் காரணமாகச் சென்றிருந்த நிலையில் அவருக்கு கொரோனா பாதிப்பிருப்பதாகக் கண்ட பக்கம் 02 »

## 149 பேருக்கு இலங்கையில் கொரோனா!

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 6 பேர் நேற்று பின்னிரவு அடையாளம் காணப்பட்டுள்ளனர் எனச் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

மருதானை, யாழ்ப்பாணம் மற்றும் குருநாகல் ஆகிய இடங்களில் இருந்து இவர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் எனச் சுகாதார அமைச்சு மேலும் கூறியுள்ளது.

அதன்படி, இலங்கையில் இதுவரை 149 கொரோனா நோயாளிகள் இனங்காணப்பட்டுள்ளனர்.

## மலேசியாவிலிருந்து திரும்பிய புத்தளம் வாசிக்கு கொரோனா

அவர் பயணித்த விமானத்தில் வந்தோரை பதிவு செய்யக் கோரல்

கொழும்பு, ஏப். 02

மலேசியாவிலிருந்து மார்ச் 17ஆம் திகதி நாட்டுக்கு வந்த ஓ.டி. 185 இலக்கமுடைய விமானத்தில் வருகை தந்த அனைவரையும் பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

இராணுவத் தளபதியும் பக்கம் 04 »

## நாடாளுமன்றத்தை உடனே கூட்டுமாறு இன்று எதிரணிகள் கூட்டாக வலியுறுத்தும்

அலரி மாளிகையில் நடக்கும் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில்

கொழும்பு, ஏப். 02

பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகையில் பிரதமரின் தலைமையில் இன்று காலை நடைபெறும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தின் போது கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மேலும் தாமதமின்றி விரைந்து கூட்டுமாறு எதிரணியினர் ஒரே குரலில் கோருவர் எனத் தெரிய வந்தது.

நாடு எதிர்கொண்டுள்ள கொரோனா பேரிடர், அறிவிக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தலை உரிய திகதியின் நடத்த முடியாமல் போனால் பக்கம் 02 »

## அறிவிக்கப்பட்ட பொதுத்தேர்தலை சட்டப்படி நடத்துவதாயின் நிறுத்தப்பட்ட தேர்தல் பணி 20ஆம் திகதி தொடங்க வேண்டும்

அரசுத் தலைமைக்குத் தேர்தல் ஆணையம் விளக்கக் கடிதம்



கொழும்பு.ஏப்.02

அறிவிக்கப்பட்ட பொதுத் தேர்தலை சட்ட விதிமுறைப்படி நடத்துவதாயின் இடைநிறுத்தப்பட்ட பொதுத் தேர்தல் பணிகள் எதிர்வரும் ஏப்ரல் 20ஆம் திகதியாவது மீள ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அதற்குள் நாட்டில் இயல்பு நிலைமை வருமோ தெரியாது. வராமல் போனால் பொதுத் தேர்தலை மேலும் தள்ளிப்போடுவதற்கு உரிய சட்டத் திருத்தங்கள் கொண்டு வரவேண்டியிருக்கும்.

– இவ்வாறு தேர்தல் ஆணையம் இலங்கை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகருக்கு கடிதம் மூலம் அறிவித்திருப்பதாக அறியவந்தது.

அரசமைப்பு சட்ட ஏற்பாடுகளின் படி – நாடாளுமன்றம் பக்கம் 02 »

## இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

*வெவ்வேறு இடங்களில் இருந்தபடி காணொலி ஊடாக அமர்வை நடத்தலாம். மாலைதீவு நாடாளுமன்றம் ஓரிரு தினங்களுக்கு முன்னர் அப்படித்தான் கூடியது'*

– இப்படி சில தினங்களுக்கு முன்னர் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ.சுமந்திரன் கூறிய கருத்தும் பிரசுரமாகியிருந்தது.

ஆனால் நிஜமாகவே அப்படி ஒரு கூட்டம் நேற்றுமாலை நடைபெற்றது.

சஜித் பிரேமதாஸ தலைமையில் அமைக்கப்பட்டுள்ள மக்கள் சக்தி இயக்கத்தின் கூட்டமே அவ்வாறு நேற்றிரவு நடைபெற்றது.

அந்தக் கூட்டணியின் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாத் பதியுதீன், மனோ கணேசன், இராதாகிருஷ்ணன், திகாம்பரம், சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, ரஞ்சித் மத்தும பண்டார, சஜித் பிரேமதாஸ ஆகியோரே தத்தமது வீடுகளில் இருந்தபடி காணொலிக் கூட்டில் (Video Conferencing) கலந்துரையாடினர். சுமார் ஒன்று, ஒன்றரை மணி நேரம் கலந்தாலோசனை நீடித்தது.

அதுவல்ல விடயம், இந்தக் கூட்டத்தில் இன்னொரு புதுமையும் நடந்தது.

இதுவரை காலமும் கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரனை ரணிலின் ஆள் என்றார்கள். இப்போது ரணில், மஹிந்தவுடன் சேர்ந்து இயங்குகின்றார், அதனால் சுமந்திரன் மஹிந்தவின் ஆள் என்று விமர்சித்தார்கள்.

ஆனால் நேற்று காணொலிக் கூட்டில் ஆலோசனை நடத்திய சஜித்தின் பக்கக் கட்சித் தலைவர்கள், அந்தக் காணொலிக் கூட்டில் இணையுமாறு சுமந்திரனையும் தேடிப் பிடித்து வலியுறுத்தினர்.

அதனால் தமது வீட்டில் இருந்தபடி அந்தக் காணொலிக் கூட்டு ஆலோசனையில் பங்களித்தார் சுமந்திரன்.

நாடாளுமன்றத்தை மீளக் கூட்டும்படி வலியுறுத்துவதில் உள்ள சட்ட ஏற்பாடுகள், வியாக்கியானங்கள், தேர்தல்கள் தள்ளிவைப்புத் தொடர்பான சட்டப்பிரச்சினைகள் ஆகியவை குறித்து ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனிடம் கருத்தும், வழிகாட்டலும், பரிந்துரையும் பெற்றுக் கொள்வதே அவர்களின் திட்டமாக இருந்தது. அதற்காகவே அவர்களால் அந்த உரையாடலுக்கு சுமந்திரன் அழைக்கப்பட்டிருந்தாராம்.

இன்று அலரிமாளிகையில் நடைபெறவிருக்கும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் வலிமையாக – ஒன்றுபட்டு – தீர்மானம் எடுத்து உறுதியாக நிற்பது என நேற்றைய காணொலிக் கூட்டத்தில் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட்டதாக அறியவந்தது.

அந்த கலந்துரையாடலின் போது தென்னிலங்கை அரசியல் நிலைவரம் குறித்துப் பிய்த்து உதறப்பட்டதாக அறியவந்தது.

கொரோனா பேரிடர் நிவாரப் பணியை தெற்கில் உள்ளூராட்சி சபைகளும் தம்பாட்டில் எடுக்கின்றன, இது அரசியலாபம் கருதி மேற்கொள்ளப்படும் நடவடிக்கை என்று நேற்றிரவுக் கூட்டத்தில் கூறப்பட்டது.

தென்னிலங்கையில் ஆளும் கட்சியின் கட்டுப்பாட்டில் இருக்கும் உள்ளூராட்சி சபைகள் அங்கு தம்பாட்டில் தத்தமது சபைகளின் நிதியை எடுத்து ஊரடங்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்கி வருகின்றன என்பது அங்குள்ள எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டு.

இன்று கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் அது குறித்து ஆட்சேபம் தெரிவிக்கப் போகின்றோம் என்று முஸ்தீபு செய்கின்றன எதிர்க்கட்சிகளின் கூட்டுகள்.

அந்தக் குற்றச்சாட்டையே இன்றைய கூட்டத்தில் ஆதாரமாக வைத்து வடக்கில் மட்டும் உள்ளூராட்சிச் சபைகள் அந்தப் பணியை முன்னெடுக்க விடாமல் தடுப்பது ஏன் என்று இன்றைய கூட்டத்தில் பங்குபற்றவிருக்கும் சம்பந்தனும் சுமந்திரனும் கேட்பார்கள் என எதிர்பார்ப்போம்...!

–மின்னல்–

## மூன்றாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றியப்பட்டுள்ளதையடுத்து கொழும்பு தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு (ஐ.டி.எச்.) மாற்றப்பட்டார்.

எனினும், கொழும்பு தொற்று நோயியல் வைத்தியசாலைக்கு மாற்றுவதற்கு நான்கு மணி நேர தாமதம் ஏற்பட்டுள்ளது. அங்கு சிகிச்சை வழங்கப்பட்டு ஒரு மணி நேரத்தில் அவர் உயிரிழந்தார் என உறவினர்கள் தெரிவித்தனர்.

## மேலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன் மூலம் யாழ்ப்பாணத்தில் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களின் எண்ணிக்கை 4ஆக அதிகரித்துள்ளது.

பலாலி தனிமைப்படுத்தல் மையத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த மானிப்பாயைச் சேர்ந்த போதகர் ஒருவருக்கு கொரோனா தொற்று உள்ளமை பரிசோதனையின் மூலம் நேற்றுப் பிற்பகல் உறுதிப்படுத்தப்பட்டது.

அதன் பின்னர் அந்த மையத்தில் தங்கவைக்கப்பட்டுள்ள மேலும் இருவர் கொரோனா தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை நேற்று பின்னிரவு உறுதிப்படுத்தப்பட்டது.

மானிப்பாயைச் சேர்ந்த போதகர் மேலதிக சிசிக்சைக்காக வெலிகந்தை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ள நிலையில் ஏனைய இருவரையும் அங்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிந்தது. இந்த இருவரில் ஒருவர் போதகரின் சாரதி என்றும், மற்றவர் ஒரு பெண் என்றும் தெரியவந்தது.

இது குறித்து யாழ். போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி தெரிவிக்கையில் –

இன்று (நேற்று) பலாலிப் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டு இருக்கின்ற 20 பேரில் 10 பேருக்கு மேற்கொண்ட ஆய்வுகூடப் பரிசோதனையில் மேலும் இருவருக்கும் தொற்று உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

(இதற்கு முந்தைய செய்தியில் ஒருவருக்கு உறுதிப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.)

ஆகவே இன்று (நேற்று) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 10 பேரில் மூவருக்கு தொற்று உள்ளதாக உறுதிப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

இவர்கள் அனைவரும் ஒரு கிழமைக்கு மேலாக அந்தப் பகுதியில் தனிமைப்படுத்தப்பட்டு இருந்தவர்கள்.

இந்த மூவரும் குறிப்பிட்ட சுவிஸ் போதகரோடு நேரடியாக தொடர்பு கொண்டவர்கள்.

ஆகவே கொரோனா தொற்று வியாதியானது எந்தவிதமான குணங்குறிகள் இன்றிச் சிலரிடையே காணப்படலாம் என்பதை இது உறுதிப்படுத்துகின்றது.

ஆகவே பொதுமக்கள் மிகவும் அவதானமாக சுகாதார அமைச்சினதும் அரசினதும் அறிவுரைகளை ஏற்று நடந்து கொள்ளவேண்டும் – என்றார்.

சுவிற்ஸர்லாந்திலிருந்து யாழ்ப்பாணம் வந்த போதகருடன் நெருங்கிப் பழகியவர்களே பலாலி தனிமைப்படுத்தல் மையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுக் கண்காணிக்கப்பட்டு வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## உள்ளூராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தற்போது இந்த நாட்டில் ஏற்பட்டுள்ள உலகளாவிய தொற்று நோயான கொவிட் 19 எனப்படும் கொரோனா வைரஸின் பாரிய தாக்கத்தினால் கடந்த 19.03.2020 ஆம் திகதி தொடக்கம் ஊரடங்கு உத்தரவு நாடு பூராகவும் அமுல் செய்யப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே.

இந்த ஊரடங்குஉத்தரவு காரணமாக நிரந்தர வருமானம் பெற்றாதவர்களும், அன்றாடம் உழைத்து உண்பவர்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளமையைக் கருத்திற்கொண்டு, அரசாங்கமும், தனியார் துறையினரும், சமூக நிறுவனங்களும், தனி மனிதர்களும் இவர்களுக்குத் தம்மாலான உதவிகளை வழங்க முன்வந்துள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களும் இவர்களுக்கு உதவ வேண்டிய கடப்பாடு கொண்டவைகளாகக் காணப்படுகின்றன. இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களில் பல்வேறு செய்திகள் வெளிவருகின்றமையைக் காணக்கூடியதாகவும் உள்ளது.

எனவே இந்த விடயத்தைத் தெளிவுபடுத்தி பொருத்தமான நடவடிக்கை எடுக்குமாறு தங்களைக் கோரும் பொருட்டு இக்கடிதம் எழுதப்படுகின்றது.

கொவிட் 19 என்கின்ற கொரோனா வைரஸ், ஒரு பாரிய உலகளாவிய தொற்று நோயாகும். இப்படியான தொற்றுநோய்க் காலங்களில் மக்களுக்கான இடர் நிவாரணம் வழங்குவதுதொடர்பாக 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் இரண்டு பிரிவுகளின் ஏற்பாடு பின்வருமாறு அமைகின்றது.

(1) பிரிவு 19 (I) பந்தி(VII): அமைச்சரினால் அங்கீகரிக்கப்பட்ட பஞ்சம் அல்லது தொற்று நோய் அல்லது வேறு நோக்கங்களுக்காக பிரதேச சபை நிதியை செலவு செய்யலாம்.

(2) பிரிவு 132 (F)அமைச்சரால் அங்கீகரிக்கப்பட்ட பஞ்சம் அல்லது தொற்று நோய் (Famine or epidemic) சம்பந்தமான எல்லாச் செலவுகளும் பிரதேச சபை நிதியிலிருந்து செலவு செய்யலாம்.

எனவே, இந்த தொற்றுநோய் தொடர்பாக பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கான சட்ட ஏற்பாடுகள் உண்டு என்பது தெளிவு.

இதேபோல மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்திலும் பின்வரும் ஏற்பாடுகள் உள்ளன.

பிரிவு 188 (1) J: பஞ்சம் அல்லது தொற்று நோய் (Famine or epidemic)க்கான இடர் நிவாரணத்திற்கான எல்லாச் செலவுகளும் மாநகர நிதியிலிருந்து செலுத்தப்படலாம்.

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க f Provincial Councils (Consequential Provisions) Act ஏற்பாடுகளின்படி அமைச்சரொருவரின் அதிகாரங்களை ஆளுநர் பிரயோகிக்கலாம்.

இந்த இடர் நிவாரணம் வழங்குவதற்காக நிதி ஏற்பாடு அல்லது ஒதுக்கீடு இல்லாமல் இருக்கும் நிலையே காணப்படுகின்றது. அந்தச் சூழ்நிலையில் நிலையான வைப்புக்களை மீளப் பெற்று செலவினங்களை மேற்கொள்ள உத்தேசிக்கப்படலாம். அவ்வாறாயின் குறித்தொதுக்கப்பட்ட வைப்புக்கள் (ear marked deposits) தவிர்ந்த மேன்மிகை (Surplus) நிதிநிலையான வைப்புக்கள் இருப்பின் அவற்றில் இருந்தே இச் செலவினை மேற்கொள்ளலாம் என்பதும் கவனத்திற்கெடுக்கப்படல் வேண்டும்.

தற்பொழுது அமுலில் உள்ள ஊரடங்குச் சட்டம் காரணமாகவும், ஒன்றுகூடல்கள் தடுக்கப்பட்டுள்ளமையாலும் முறைப்படியான கூட்டங்களைக் கூட்டி தீர்மானங்களை இயற்ற முடியாத நிலையில் பெரும்பான்மை உறுப்பினர் கையொப்பமிட்டு பின்னர் நிலைமை சீரடைந்ததும் முறையேற்கப்படும் என்று குறிப்பிடும் எழுத்து மூலமான தீர்மானம் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில் அதனை சபைத் தீர்மானமாகக் கணித்து நடவடிக்கை எடுக்கப்படலாம் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எனவே இதற்கமைவான உள்ளூராட்சி மன்றங்களின் கோரிக்கைகளை சாதகமாக பரிசீலித்து அங்கீகாரத்தை வழங்கியுதவுமாறு வேண்டுகின்றோம்–என்றுள்ளது.

## இடர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்ற உறுப்பினரும், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் தலைவருமாகிய மாவை சேனாதிராசா தனது சொந்த நிதியிலிருந்து ஐந்து லட்சம் ரூபாவை வழங்கியிருக்கிறார்.

அந்த நிதியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ள உலர் உணவுப் பொருட்கள் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் இளைஞர் அணி, மகளிர் அணிகளின் ஊடாக நேற்று முதல் தேவையுள்ள மக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்

## ஏப்ரல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தத் தினங்களில் அனைத்து மருந்தகங்களையும் திறப்பதற்கு அனுமதியளித்திருப்பதாக பொலிஸ் மா அதிபருக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கடிதம் மூலம் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் சுகாதார அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி, கொரோனா பரம்பலைக் கட்டுப்படுத்தும் ஜனாதிபதி செயலணியின் தலைவர் பஸில் ராஜபக்ஷவிடம் அனுமதி பெற்றுள்ளார் என்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

## அறிவிக்கப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மார்ச் 2ஆம் திகதி கலைக்கப்பட்டமையால் புதிய நாடாளுமன்றத்தின் அமர்வு மூன்று மாதங்கள் கழித்து – ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் இடம் பெறவேண்டும்.

அப்படி ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் இந்தத் தேர்தலை நடத்துவதாயின், இடைநிறுத்தப்பட்ட தேர்தல் நடவடிக்கைகள் குறைந்த பட்சம் வரும் 20ஆம் திகதிக்குள் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும். அப்படி ஆரம்பிக்கப்பட்டால்தான் ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் கூடத்தக்கதாக தேர்தலை நடத்த முடியும்.

ஆனால் அதற்கு வாய்ப்புகள் இருப்பதாகத் தெரியவில்லை.

அப்படி வரும் 20ஆம் திகதிக்குள் தேர்தல் பணிகளை ஆரம்பிக்க முடியாமல் விட்டால் தேர்தல் தொடர்பான சட்டங்களை புதிதாக மாற்றி அமைக்க வேண்டியிருக்கும்.

– இந்தச் சாரப்பட தேர்தல் ஆணையம் ஜனாதிபதி, பிரதமர், சபாநாயகர் ஆகியோருக்கும் விளக்கக் கடிதம் எழுதியிருப்பதாக அறியவந்தது.

தேர்தல் ஆணைய எதிர்பார்ப்புப்படி தேர்தல் தொடர்பான சட்டங்களை மாற்றுவதாயின் அதற்கு நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டும். அரசமைப்பில் திருத்தம் கொண்டு வருவதாயின் குறைந்த பட்சம் நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பங்கினரின் ஆதரவைப் பெறவேண்டும். ஒத்தி வைக்கப்பட்ட தேர்தலை நடத்துவதற்கான சட்ட முயற்சி என்பதால் அதற்கு எதிர்க்கட்சிகளும் ஒத்திழைப்புத் தரும் என எதிர்பார்க்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## நாடாளுமன்றத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்பட்டுள்ள சட்ட இக்கட்டு போன்றவை குறித்துத் தீர்மானங்கள் எடுப்பதற்காக இனியும் காலதாமதம் செய்யாமல் நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கூட்ட வேண்டும் என எதிரணியினர் இன்று கோருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஊரடங்கு அறிவிக்கப்பட்ட நிலையில் உரிய நிவாரணப் பொருள்கள் மக்களை எட்டாமல் இருக்கின்றமை குறித்து எதிரணியினர் இன்று காத்திரமான குற்றச்சாட்டுக் களை அக்கூட்டத்தில் அடுக்குவார்கள் என்றும் தெரியவந்தது. (உ)

## வீட்டிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக் காலை அவர் உயிரிழந்தார்.

அவர் கடந்த பெப்ரவரி 20ஆம் திகதியே மாலைதீவிலிருந்து இலங்கைக்கு வந்திருக்கிறார்.

பொது சுகாதாரப் பரிசோதகர்கள் சம்பவ இடத்தை பார்வையிட்டனர் எனவும், கொரோனா தாக்கத்தால் இந்த உயிரிழப்பு நிகழ்ந்திருக்கலாம் என்று சந்தேகிப்பதாகவும் கஹதுடுவ சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதன்படி, ஹோமாகம மருத்துவமனையின் சட்ட மருத்துவ அதிகாரி வைத்தியர் வருண ஜெயசூரிய சம்பவ இடத்துக்கு நேரில் சென்று சடலத்தை பார்வையிட்டு, மேலதிக பரிசோதனைகளுக்காக களுபோவில போதனா வைத்தியசாலைக்கு அனுப்ப உத்தரவிட்டார்.

மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் அறிக்கை வரும் வரை அந்த வீட்டிலிலிருப்பவர்களை சுயதனிமைக்குள்ளாக உத்தரவிடப்பட்டுள்ளது.

வீடு மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளை கிருமி நீக்கம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## சுகாதாரப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவ்வாறு இல்லாமல் தன்னிச்சையாக உதவிகளை வழங்குவது தடை செய்யப்பட்டுள்ளது என வலி. தென்மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அ. ஜெபநேசன் அறிவித்துள்ளார்.

தற்போதைய இக்கட்டான சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு இந்தக் கட்டுப்பாடுகளை சகலரும் பின்பற்றி நடக்கவேண்டும் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று புதிதாக இனங்காணப்பட்டுள்ள மூவரும் வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பதால் உடனடியாகத் தற்காப்பு நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டிய தேவை எழுந்துள்ளதாகவும் ஜெபநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்துடன் இந்தப் பகுதியில் நடமாடும் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் வியாபாரிகளும் சுகாதாரப் பரிசோதகர்களின் அனுமதியில்லாமல் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்றும், உரிய சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வியாபாரத்தில் ஈடுபடுமாறும் அவர் கோரியுள்ளார்.

# அதிவேக டிராக்டர் புரண்டதில் இளைஞர் நசியுண்டு உயிரிழப்பு

## ஏறாவூர் சவுக்கடியில் நேற்று மாலை கோரம்



மட்டக்களப்பு,ஏப்.02

மட்டக்களப்பு – ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட் ஏறாவூர் சவுக்கடியில் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார்.

ஏறாவூர் சவுக்கடி கடற்கரை வீதியில் நேற்றுப் புதன்கிழமை மாலை 04.30 மணியளவில் டிராக்டரில் அதிவேகமாக பயணித்ததால் வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியில் அருகாமையில் பனை மரமொன்றில் மோதியதில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

மட்டக்களப்பு வாகரை பனிச்சங்கேணியைச் சேர்ந்த எஸ்.சுரேஷ்காந்த் (22வயது) என்பவரே டிராக்டரில் நசியுண்டு இவ்வாறு பலியாகியுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொள்கின்றனர்.

சம்பவம் தொடர்பில் வாகரையில் உள்ள உயிரிழந்த இளைஞனின் குடும்பத்தாருக்கு சம்பவ இடத்தில் இருந்தவர்கள் தொலைபேசி மூலம் பலியான விடயத்தைக் கூறியபோது அதற்கு ”இன்று ஏப்ரல் ஃபூல் என்று எங்களுக்குத் தெரியும். போனை வையுங்கள்” – என்று அழைப்பைத் துண்டித்தனராம்.

(துறைநிலாவனை நிருபர் க.விஜயரெத்தினம்)





# அரசின் நிவாரணத் திட்டங்கள் மக்களைச் சென்றடையவில்லை

## வேலுகுமார் விசனம் தெரிவிப்பு



கண்டி,ஏப்.02

கொரோனா அச்சுறுத்தலை அடுத்து அமுல்படுத்தப்பட்டுள்ள ஊரடங்குச்சட்டத்தால் மக்கள் வீடுகளுக்குள் முடங்கிப் போயுள்ளனர்.

இவ்வாறு முடங்கியுள்ள மக்களுக்கு அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டுள்ள நிவாரணத் திட்டங்கள் இன்னும் சென்றடையவில்லை. எனவே, இது விடயத்தில் அரசாங்கம் துரிதமாக செயற்படவேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய தேசிய முன்னணியின் கண்டி மாவட்ட நாடாளுமன்ற வேட்பாளருமான வேலுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் நேற்று விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கொரோனா வைரஸ் தாக்கத்தையடுத்து நாட்டில் ஏற்பட்டுள்ள சூழ்நிலையால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் மக்களுக்காக பல நிவாரணத் திட்டங்களை அரசாங்கம் அறிவித்தது. வீடுதேடி வந்து அத்தியாவசியப் பொருள்கள் வழங்கப்படும் என்பது உட்பட பல விடயங்கள் அதில் உள்ளன.

இருந்தும் அவை செயற்படுத்தப்படவில்லை. கண்டி மாவட்டத்தில் மட்டுமல்ல, நாட்டில் பல இடங்களிலும் இதே நிலைமையே காணப்படுகின்றது.

'கொரோனா' வைரஸைக் கட்டுப்படுத்துவதற்காக பொறுப்புடன் செயற்படும் அதேவேளை, மக்களுக்கு தேவையான அத்தியாவசிய சேவைகளை தங்கு தடையின்றி அரசாங்கம் வழங்க வேண்டும். வைரஸிலிருந்து மக்களை பாதுகாப்பதுபோல், பட்டினிச் சாவில் இருந்தும் அவர்களை மீட்டெடுக்க வேண்டும்.

நாமும் களத்தில் இருந்து சேவைகளை வழங்கி வருகின்றோம். மக்களால் முன்வைக்கப்படும் முறைப்பாடுகளை ஜனாதிபதி செயலணியின் கவனத்துக்கும் கொண்டுவந்துள்ளோம். எனவே, ஒரு சில பகுதிகளில் மட்டுமல்லாது பட்தொட்டியெங்கும் அரச சேவை விஸ்தரிக்கப்படவேண்டும். என்றுள்ளது.

# கிழக்கில் ஊரடங்கு தளர்வில் மக்கள் நடமாட்டம் தளர்வு

கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக அலுல்படுத்தப்பட்டிருந்த ஊரடங்குச் சட்டம், கிழக்கு மாகாணத்தில் நேற்றுத் தளர்த்தப்பட்டதாயினும் அச்சமயம் பொதுமக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று உணவகங்கள், புடவைக் கடைகள், வீதியோர வியாபாரங்கள் போன்றவைகளைத் திறப்பதற்கு பிரதேசசபை அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த தினங்களில் ஊரடங்குச்சட்டம் தளர்த்தப்பட்ட போது, அதிகளவிலான பொதுமக்கள் முண்டியடித்துக்கொண்டு பொருள் கொள்வனவில் ஈடுபட்டு வந்தமையை அவதானிக்க முடிந்தது என்றும், ஆனால் நேற்றைய தினம் ஓட்டமாவடி, வாழைச்சேனை, மீராவோடை போன்ற பிரதேசங்களில் மக்களின் நடமாட்டம் குறைவாகவே காணப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்தோடு பொதுமக்கள் ஒன்றுகூடும் இடங்களுக்குச் சென்று பொலிஸார் கொரோனா வைரஸ் தொடர்பான அறிவுறுத்தல்களை வழங்கினர்.

பொதுமக்களின் வருகை இன்மையால் வியாபார நடவடிக்கைகளும் ஸ்தம்பிதம் அடைந்திருந்தன என வியாபாரிகள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# முகமூடி அணிந்து வந்தவர்களை பதுளையில் பதம் பார்த்த நாய்கள்

## 7 மணி நேரத்தில் 41 பேர் இலக்காகினர்



பதுளை, ஏப்.02

பதுளையில் நேற்றுக் காலை 8 மணி முதல் பிற்பகல் 3 மணி வரையான 7 மணி நேர இடைவெளிக்குள் நாய்க்கடிக்கு இலக்காகிய 41 பேர், பதுளை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று, வைத்தியசாலையின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் அநேகமானவர்கள், நன்கு பரிச்சயமான நாய்களிடமே கடிக்கு உள்ளாகியுள்ளனர் என்று தெரியவருகிறது.

முகக் கவசங்ளை அணிந்து கொண்டு வீதிகளில் பயணித்ததால், அச்சம் காரணமாக நாய்கள் இவர்களைக் கடித்திருக்கலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. வேட்டை நாய்களின் கடிக்குள்ளானசிலரும் இதில் உள்ளடங்குவர் எனத் தெரியவருகிறது.

# ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் விமானங்களும் முடங்கின

கொழும்பு,ஏப்.02

ஏப்ரல் மாதம் 8 திகதி முதல் 30 ஆம் திகதி வரை ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸின் அனைத்து பயணிகள் விமான சேவைகளும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

எனினும் சரக்கு விமானங்கள் மாத்திரம் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடும் என ஸ்ரீலங்கன் விமான சேவை தெரிவித்துள்ளது.

இலங்கையில் அதிகரிக்கும் கொரோனா தொற்றுக் காரணமாக முன்னரே இலங்கையில் தரையிறங்கும் விமானங்கள் தடை செய்யப்பட்டிருந்தமையோடு வெளிநாடுகளுக்குப் பயணிகளை ஏற்றிச் செல்லும் விமானங்களுக்கு மாத்திரம் தரையிறங்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே தற்போது ஸ்ரீலங்கள் ஏர்லைன்ஸ் தனது அனைத்து சேவைகளையும் ரத்து செய்வதாக அறிவித்துள்ளது.

விமான சேவைத் துறையில் ஏறப்பட்டுள்ள சந்தையின் நிலை மற்றும் பல்வேறு தரப்பினரால் விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளதாக அந்த நிறுவனம் கூறியுள்ளது.

எனினும், இலங்கைக்குவருவதற்கு எதிர்பார்த்துள்ள வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்து வரத் தேவையான சேவையினை வழங்க விருப்பத்துடன் உள்ளதாகவும் ஸ்ரீலங்கன் விமான சேவை சுட்டிக்காட்டியுள்ளது.

காலைக்கதிர்
Kalaikathir



# நமது பார்வை



உண்மை – நேர்மை – பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – onlinekathir.com

## நாடாளுமன்றை மீளவும் கூட்டுவாரா கோட்டாபய?

கட்சித் தலைவர்களின் கூட்டத்தை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ் அழைத்திருக்கின்றார். அவரது உத்தியோகபூர்வ இல்லமான அலரிமாளிகையில் அவரது தலைமையில் இன்று காலை அது நடைபெறுகின்றது.

இந்தக் கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ பங்கு பற்றுவாரா என்பது தெரியவில்லை.

ஆனால், இந்த கூட்டத்தில் பிரதான எதிர்க்கட்சிகள் அனைத்தும் ஒரு கோரிக்கையை ஒன்றுபட்டு வலியுறுத்த விருக்கின்றன என்று தெரிகின்றது.

அது – கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை உடனடியாக மீளக் கூட்ட வேண்டும் என்பதாகும்.

அதற்கு இரண்டு காரணங்களை அவை முன்வைக்கும் என்று தெரிகின்றது.

ஒன்று – அறிவிக்கப்பட்டு இடைநிறுத்தப்பட்டுள்ள நாடாளுமன்றத் தேர்தலை காலம் பிந்தி நடத்துவதாயின் அதற்கான சட்ட ஏற்பாடுகளை செய்து கொள்வதற்காக.

அடுத்தது – தேசியப் பேரிடராக வந்திருக்கும் கொரோனா சிக்கலை எதிர்கொள்வதற்காக.

தேர்தல் தொடர்பான விடயத்தில் தேர்தல் ஆணையம் சில விடயங்களை ஜனாதிபதி, பிரதமர் மற்றும் சபாநாயகருக்கு உத்தியோகபூர்வமாக எழுத்தில் சுட்டிக்காட்டியிருப்பதாக அறியவருகின்றது.

அரசமைப்புச் சட்டத்தின்படி மார்ச் 2ஆம் திகதி நாடாளுமன்றம் கலைக்கப்பட்டுள்ளமையால், புதிய நாடாளுமன்றம் ஜூன் 2ஆம் திகதிக்கு முன்னர் கூட வேண்டும். அத்திகதிக்கு முன்னர் புதிய நாடாளுமன்றம் கூடக் கூடிய வகையில் பொதுத் தேர்தலை நடத்த வேண்டுமானால், தற்போது நிறுத்தப்பட்டுள்ள பொதுத் தேர்தல் நடவடிக்கைகள் இந்த மாதம் (ஏப்ரல்) 20ஆம் திகதிக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட வேண்டும். அதற்கு சாத்தியமுண்டோ தெரியவில்லை. அப்படி இல்லாவிட்டால் சட்டங்களில் மாற்றங்களைக் கொண்டு வந்துதான் தேர்தலை நடத்த முடியும். – என்ற சாரப்பட தேர்தல் ஆணையம் அரசுத் தலைமைக்கு இந்தக் கடிதம் மூலம் சுட்டிக்காட்டியிருப்பதாக அறியவந்தது.

நிறுத்தப்பட்ட தேர்தல் நடவடிக்கைகளை அடுத்த 18 நாள்களுக்குள் தொடங்குவதற்கான வாய்ப்பு – சாத்தியம் – இருப்பதாகத் தென்படவில்லை.

எனவே தேர்தல் ஆணையம் சுட்டிக் காட்டியபடி சட்டங்களில் மாற்றம் – திருத்தம் – செய்யப்பட வேண்டியது தவிர்க்க முடியாத கட்டாயமாகும் என்பது துலாம்பரமாகி வருகிறது.

அப்படி சட்டங்களைத் திருத்தும் நடவடிக்கையை முன்னெடுப்பதாயின், நாட்டின் சட்டவாக்கல் சபையான நாடாளுமன்றம் கூடுவது தவிர்க்க முடியாததாகும்.

அதனைத்தான் இன்றைய கூட்டத்தில் எதிர்க்கட்சிகள் ஒன்று திரண்டு வலியுறுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலும், இன்றைய கூட்டத்தில் கொரோனா தொற்று விடயத்தைக் கையாளும் அரசின் போக்குக் குறித்து எதிர்க்கட்சிகள் பிய்த்து உதறும் என எதிர்பார்க்கப்படுகின்றுது.

கொரோனாத் தொற்று அபாயம் மோசமாகிக் கொண்டிருக்கின்றது. ஆனால் இந்த விடயத்தைக் கையாளும் அரசு இன்னும் இதனை ஒரு பேரிடராக அறிவிக்கவில்லை. இந்த விடயத்தை இன்னும் இறுக்கமாகவும், உறுதியாகவும் கையாளுவதானால் 'அவசரகால நிலைமை' அறிவிக்கப்பட வேண்டும். ஆனால் இன்னும் அறிவிக்கப்படவில்லை.

இந்த இரண்டையும் செய்யாமல் கொரோனா தொற்றுப் பரவல் தடுப்பு விவகாரத்தை அரசு பொதுத் தேர்தலில் அரசியல் ஆதாயம் தேடும் விவகாரமாகக் கையாளுகின்றது என ஜே.வி.பி. உட்பட பிரதான எதிர்க்கட்சிகள் இன்றைய கூட்டத்தில் அரசுத் தரப்பை வறுத்தெடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பொதுத் தேர்தலைத் தள்ளிப்போட்டு நடத்துவதற்கான சட்ட விதிகளை ஏற்படுத்துவதற்கு மட்டுமல்லாமல், ஏப்ரல் 30ஆம் திகதிக்குப் பின்னரும் நிதி விடயங்களைக் கையாள்வதற்கான இடைக்கால கணக்கு – வழக்கு அறிக்கைக்கு நாடாளுமன்ற அனுமதியைப் பெறுவதற்காகவும் நாடாளுமன்றத்தை மீள அழைக்க வேண்டிய கட்டாயம் அரசுத் தரப்புக்கு உண்டு.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ என்ன செய்யப் போகின்றார்? இது தொடர்பில் அரசின் பதில் என்ன என்பதற்கான சமிக்ஞைகள் இன்றைய அலரிமாளிகைக் கூட்டத்தில் பிரதிபலிக்கும் என எதிர்பார்க்கலாம்.

# தேர்தலில் அரசியல் லாபமீட்டும் இலக்கிலேயே கொரோனாத் தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகள்

## ராஜபக்ஷக்களை கடுமையாகச் சாடுகிறது ஜே.வி.பி.



உயிரிகொல்லி வைரஸான கொரோனா விவகாரத்தை ஒட்டிய அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அவரது சகோதரரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோர் தலைமையிலான அரசாங்கம் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலை இலக்குவைத்தே மேற்கொள்வதாக ஜே.வி.பி. குற்றஞ்சாட்டியுள்ளது.

அதற்காகவே அரச மட்டத்தில் எந்தவொரு பதவியும் வகித்திராத ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஸ்தாபகரான பஸில் ராஜபக்ஷவை கொரோனா ஒழிப்பு செயலணியின் தலைவராக நியமித்திருப்பதாகவும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

பத்தரமுல்லையிலுள்ள ஜே.வி.பி யின் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வ இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார். தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் –

சர்வ கட்சித் தலைவர்கள் கூட்டத்திற்கு முன்னரே கொரோனா ஒழிப்பிற்கான தேசிய வேலைத்திட்டம் ஒன்றை உருவாக்கும்படி அரசாங்கத்தை நாங்கள் வலியுறுத்தினோம். இதனிடையே பஸில் ராஜபக்ஷ கொரோனா வைரஸ் ஒழிப்பு தொடர்பான ஜனாதிபதியின் செயலணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். இது எந்த அளவுக்கு பொருத்தமானது என்பதுபற்றி சிந்திக்க வேண்டும். எப்படியான அரசியல் விமர்சனங்கள் இருந்தாலும் நாட்டைக் காப்பாற்றும் வேலைத்திட்டமே முக்கியமானதாகும்.

இப்படியான நிலையில் கொரோனா ஒழிப்பு செயலணியை ஓர் அரசியல் கட்சியின் தலைமைக்கு வழங்கப்பட்டால் அது தேர்தல் பிரசாரத்திற்காகப் பயன்படுத்தப்படும் பட்சத்தில் பொருத்தமற்ற செயலாகிவிடும். பஸில் ராஜபக்ஷ நாடாளுமன்றத்தை அண்மையில் பிரதிநிதித்துவம் செய்யவில்லை. அமைச்சராகவும் இருக்கவில்லை.

அவர் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட – எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள – அரசியல் கூட்டணியின் தலைவர்களில் ஒருவராகவும் இருக்கின்றார். அப்படிப்பட்ட ஒருவருக்கு இந்த செயலணியின் தலைவர் பதவி வழங்கப்பட்டுள்ளமை இந்த அரசாங்கத்தின் அரசியல் ஒழுக்கம் மற்றும் விழுமியங்கள் குறித்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது. – என்றார்.

## ஜனாதிபதியுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கொரோனா வைரஸ் பரவலுடன் நாட்டில் உருவாகியுள்ள நிலைமை குறித்து அரசுக்கும் ஐக்கிய தேசிய கட்சிக்கும் இடையில் கலந்துரையாடலொன்று நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் இடம்பெற்றது.

கொரோனா வைரஸ் நாட்டினுள் பரவுவதை தவிர்ப்பதற்கு அரசு இதுவரை முன்னெடுத்துள்ள செயற்பாடுகள் மற்றும் எதிர்காலத்தில் திட்டமிட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி ஜனாதிபதி விரிவாக விளக்கினார். தற்போது வைரஸ் தொற்றுடையவர்களில் பெரும்பாலானவர்கள் நோய்த் தடுப்பு மத்திய நிலையங்களில் அடையாளம் காணப்பட்டவர்கள் அல்லது இதற்கு முன்னர் வைரஸ் தொற்றுக்குள்ளாகியவர்களுடன் நெருக்கமாக பழகியவர்களுக்கு மத்தியிலிருந்து அடையாளம் கண்டு கொண்டதும் வைரஸை கட்டுப்படுத்துவதற்கு பெரிதும் உதவியதாக ஜனாதிபதி குறிப்பிட்டார்.

மக்கள் வாழ்க்கையை சுமுகமாக பேணுவதற்கு அத்தியாவசிய சேவைகள், உணவுப் பொருள்கள், மருந்துப் பொருள்களை விநியோகிக்கும் பொறிமுறை மற்றும் சிறப்புச் செயலணி நடைமுறைப்படுத்தியுள்ள நிகழ்ச்சித்திட்டம் பற்றி அதன் தலைவரும் ஜனாதிபதியின் சிறப்புப் பிரதிநிதியுமான பஸில் ராஜபக்ஷ விளக்கினார்.

நாட்டில் இனம்காணப்பட்ட 65 லட்சம் குடும்பங்களில் 53 லட்சம் குடும்பங்களுக்கு ஏப்ரல் மாதம் 09 ஆம் திகதிக்கு முன்னர் 5000 ரூபாய் பெற்றுக்கொடுக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக பஸில் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

வைரஸ் தொற்று பரவுவதை ஒழிப்பதற்காக முன்னெடுக்கப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டம் மக்களின் இயல்பு வாழ்க்கைக்கு ஏற்படக்கூடிய தடைகளை குறைக்கும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பது இருதரப்பினதும் கருத்தாகவிருந்தது.

மருத்துவர்கள், தாதிகள் உள்ளிட்ட அனைத்து சுகாதார ஊழியர்கள், முப்படையினர், பொலிஸார் உள்ளிட்ட அனைத்து பாதுகாப்பு தரப்பினரின் அர்ப்பணிப்பும் இரு தரப்பினரினதும் பாராட்டுக்குள்ளானது.

மாவட்ட மட்டத்தில் தமது கட்சிப் பிரதி நிதிகளுக்கு அறிவூட்டுவதற்கும் உடன்பட்டனர் இரண்டு மணித்தியாலங்களுக்கும் மேல் இக்கலந்துரையாடல் மிகவும் சுமுகமாகவும் வெற்றிகரமாகவும் இடம் பெற்றது.

அரசை பிரதிநிதித்துவப்படுத்தி அமைச்சர்கள் தினேஷ் குணவர்த்தன, நிமல் சிறிபால டி சில்வா, விமல் வீரவன்ஸ், பந்துல குணவர்த்தன, ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, டலஸ் அழகப்பெரும ஆகியோரும் ஐக்கிய தேசிய கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தி உப தலைவர் ரவி கருணாநாயக, அர்ஜுன ரணதுங்க, ருவன் விஜேவர்த்தன, தயா கமகே, பாலித ரங்கேபண்டார, நவீன் திஸாநாயக, லக்ஷ்மன் விஜயமான்ன ஆகியோரும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி பீ.பி ஜயசுந்தர, நிதி அமைச்சின் செயலாளர் எஸ். ஆட்டிகல மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் பேராசிரியர் டபிள்யு டீ. லக்ஷ்மன் ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர் – என்றுள்ளது.

## மலேசியாவிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொரோனா பரவலைக் கட்டுப்பாட்டுத்தும் செயலணியின் தலைவருமான லெப். ஜெனரல் சவேந்திர சில்வா இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

மலேசியாவிலிருந்து மார்ச் 17ஆம் திகதி நாட்டுக்கு வந்த ஓ.டி 185 இலக்கமுடைய விமானத்தில் வருகை புத்தளத்தைச் சேர்ந்த ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளதால் இந்தக் கோரிக்கை விடுக்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

பொலிஸ் நிலையத்தில் பதிவுகளை மேற்கொள்வதுடன் வீடுகளில் சுய தனிமைப்படுத்தலில் இருக்குமாறும் அவர் கேட்டுள்ளார்.

## நாளை

03.04.2020
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம்: பூசம் பி.ப 01.50
திதி : தசமி மு.இ 07.53

இராகுகாலம் : 10. 40- 12.10
சுப நேரம் : 06.10 - 07.40



# உலகப் புகழ் பெற்ற ஓவியம் திருட்டு

நெதர்லாந்து நாட்டின் சிங்கர் லாரன் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்த வின்சென்ட் வான்கோவின் வசந்தகால தோட்டம் ஓவியம் உள்பட பல அரிய பொக்கிஷங்களை முகமூடி கொள்ளையர்கள் சிலர் திருடிச் சென்றுவிட்டனர். பொலிஸார் அவர்களை வலை வீசி தேடி வருகின்றனர்.

நெதர்லாந்தை சேர்ந்த புகழ்பெற்ற ஓவியர் வின்சென்ட் வான்கோ. இவர் 1984ஆம் ஆண்டு வசந்தகால தோட்டம் என்ற பெயரில் வரைந்த ஓவியம் உலக அளவில் புகழ் பெற்றதாகும்.

இந்த ஓவியம் தலைநகர் ஆம்ஸ்டர்டாமில் உள்ள சிங்கர் லாரன் அருங்காட்சியகத்தில் பாதுகாக்கப்பட்டு வந்தது.

இந்த நிலையில் கொரோனா வைரஸ் காரணமாக இந்த அருங்காட்சியகம் கடந்த 12ஆம் திகதி முதல் மூடப்பட்டுள்ளது. முகமூடி கொள்ளையர்கள் சிலர் அருங்காட்சியகத்தின் ஜன்னல் கண்ணாடியை உடைத்து உள்ளே நுழைந்தனர்.

அவர்கள் வின்சென்ட் வான்கோவின் வசந்தகால தோட்டம் ஓவியம் உள்பட பல அரிய பொக்கிங்களைத் திருடிச் சென்றுவிட்டனர். பொலிஸார்ர் அவர்களை வலை வீசி தேடி வருகின்றனர்.

# ஐரோப்பாவில் மட்டும் 30 ஆயிரம் இறப்புக்கள்

பிரசல்ஸ், ஏப்ரல் 2

உலகின் அனைத்து நாடுகளையும் அடக்கி ஆண்டுவரும் கொரோனா வைரஸால் உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கை 44 ஆயிரத்தைக் கடந்திருக்கும் நிலையில் அவர்களில் 30 ஆயிரம் பேர் ஐரோப்பாவைச் சேர்ந்தவர்கள்.

இந்த நோயால் இதுவரையில் சுமார் 9 லட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். அவர்களில் சுமார் 2 லட்சம் வரையிலானோர் மட்டுமே குணமாகியுள்ளனர்.


சீனாவின் ஹூபேய் மாகாணத்தின் வுஹான் நகரில் முதன் முதலில் கண்டறியப்பட்ட இந்த வைரஸ் தற்போது 203 நாடுகள் மற்றும் தன்னாட்சி நிலங்களில் பரவியுள்ளது.

மிகக் கடுமையான கட்டுப்பாட்டு நடவடிக்கைகளின் ஊடாக வுஹானில் நோய்ப் பரவல் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதை அடுத்து தீவிர மருத்துவக் கண்காணிப்புடனான இயல்பு நிலை அங்கு திரும்பிக் கொண்டிருக்கிறது.

ஆனால், சீனாவில் இருந்து நோய்த் தொற்று ஜாப்பாவை எட்டியதில் இருந்து அங்கு கொலைவெறியாட்டம் நிகழ்த்தி வருகின்றது. இத்தாலி, சுவீடன் ஆகிய நாடுகளே உலகிலேயே அதிக உயிரிழப்புக்களைச் சந்தித்துள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் இதுவரை நிகழ்ந்த உயிரிழப்புக்களின் எண்ணிக்கை 30 ஆயிரத்தை எட்டியுள்ளது. அதில் பெரும் பகுதியை இத்தாலி (12, 438), ஸ்பெயின் (9,053), பிரான்ஸ் (3,523), பிரிட்டன் (2, 352), நெதர்லாண்ட் (1,173), ஜேர்மினி (821) ஆகிய நாடுகள் பிடித்துள்ளன.

ஐரோப்பிய நாடுகளில் தொற்றுப் பரவும் வேகமும் அதிகமாக உள்ளது. ஸ்பெயினிலும் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்தைக் கடந்துள்ளது எனினும் வைரஸ் பரவும் வேகம் குறையத் தொடங்கி இருப்பதாக அந்த நாட்டு அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவித்தார்.கடந்த ஐந்து நாட்களில் ஸ்பெயினில் ஒவ் வொரு நாளும் 800க்கும் அதிகமானவர்கள் கொரோனா பாதிப்பால் உயிரிழுந்திருக்கின்றனர்.



# கொரோனா துளிகள்

* பாதிக்கப்பட்ட மொத்த நாடுகள், நிலங்கள்: 203
* உயிரிழுந்தோர்: 44 ஆயிரத்து 215
* தொற்றுக்குள்ளானோர்: 8 லட்சத்து 86 ஆயிரம்
* குணமானோர்: ஒரு லட்சத்து 85 ஆயிரம்
* மோசமான நிலையிலுள்ளோர்: 34 ஆயிரம்
* ஆகக் கூடுதல் இறப்பு: இத்தாலி நாட்டில் 12 ஆயிரத்து 428
* ஆகக் கூடுதல் தொற்று: அமெரிக்கா நாட்டில் ஒரு லட்சத்து 89 ஆயிரம்
* இறப்பில் இரண்டாம் இடம்: ஸ்பெயின் நாடு, 9 ஆயிரத்து 53
* இன்றைய தொற்று நிலை: 27 ஆயிரத்து 214
* 50 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 5 நாடுகள், அமெரிக்கா, ஸ்பெயின், சீனா, ஜேர்மனி, பிரான்ஸ்
* 15 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 3 நாடுகள், ஈரான், பிரிட்டன், சுவிற்சர்லண்ட்
* 10 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 4 நாடுகள், பெல்ஜியம், நெதர்லண்ட், துருக்கி, ஒஸ்ரியா
* 5 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 5 நாடுகள், தென்கொரியா, கனடா, போர்த்துக்கல், பிரேசில், இஸ்ரேல்.
* 3 ஆயிரத்துக்கு மேல் தொற்று: 7 நாடுகள், சுவீடன், ஆஸ்திரேலியா, நோர்வே, செஸ்சியா, அயர்லண்ட், டென்மார்க், சிலி
* 2 ஆயிரத்துக்கு மேல்: 9 நாடுகள், மலேசியா, ரஷ்யா, ரொமானியா, பொலன்ட், பிலிப்பைன்ஸ், ஈகுவடோர், ஜப்பான், லக்ஸம்பேர்க், பாகிஸ்தான்
* ஸ்பெயினில் நேற்று ஒரே நாளில் 864 பேர் உயிரிழுந்தனர்.
* பிரிட்டனில் நேற்று 563 பேர் உயிரிழுந்ததை அடுத்து அங்கு உயிரிழப்பு எண்ணிக்கை 2 ஆயிரத்து 352ஆக உயர்ந்துள்ளது.
* இது ஒரு வாழ்வா சாவாப் போராட்டம் என்பதால் மக்கள் அனைவரும் அரசின் வழிகாட்டல்களை முறையாகப் பின்பற்றும்படி அதிபர் ட்ரம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.
* அமெரிக்காவின் உயிரிழப்பு 4 ஆயிரத்து 102ஆக உயர்ந்துள்ளது. 2 லட்சம் பேர் அங்கு உயிரிழப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.
* ஈரானில் உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கை 3 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.
* கொரோனா அச்சம் காரணமாக விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் நிறுத்தப்பட்டுள்ளன. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இந்தப் போட்டி நிறுத்தப்படுவது இதுவே முதல் தடவை.
* பிரிட்டனின் பாதுகாப்பு அமைச்சர் பென் வாலஸ் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளார். பிரிட்டிஷ் அமைச்சரவையில் தொற்றால் பாதிக்கப்பட்ட நான்காவது நபர் இவர்.
* பிரிட்டனின் முன்னாள் மெய்வன்மைப் போட்டியாளரான ஜேம்ஸ் கம்பெல் தனது வீட்டின் பின்புறத்தில் உள்ள 6 அடி மட்டுமே இருக்கும் இடத்தில் தொடர்ந்து 5 மணி நேரம் மரத்தன் ஓடி 23 ஆயிரத்து 500 டொலர் நிதி சேகரித்துள்ளார். இந்த நிதி கொரோனாவுக்கு எதிராகப் போராடும் தேசிய சுகாதார சேவைக்கான தொண்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படும்.
* சேர்பியாவின் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் பிரனிஸ்லவ் பிராஸிக் கொரோனா வைரஸ் தாக்கத்தால் உயிரிழுந்தார். சேர்பிய ஆட்சியாளர்கள் வரிசையில் நிகழ்ந்துள்ள உயர் இழப்பு இதுவாகும்.
* ஹங்கேரி நாட்டைச் சேர்ந்த உலகச் சம்பியனான நீச்சல் வீராங்கனை உள்ளிட்ட அந்த நாட்டின் நீச்சல் அணியின் 9 உறுப்பினர்களுக்கு கொரோனா தொற்றியிருப்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

# அடுத்து வரும் இரு வாரங்கள் அமைதியானவையாக இராது

## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் மக்களுக்கு எடுத்துரைப்பு



அமெரிக்காவில் அடுத்து வரும் இது வாரங்கள் வலி நிறைந்தவையாக இருக்கும் என்று அதிபர் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில் கொரோனா வைரஸுக்கு சுமார் 1 லட்சத்து 89 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சுமார் 4,000க்கும் அதிகமானவர்கள் உயரிழந்துள்ளனர். 7 ஆயிரம் பேர் குணமடைந்துள்ளனர்.

இந்த நிலையில் அமெரிக்காவில் கொரோனா வைரஸ் தொற்று தொடர்ந்து வீரியமிக்கதாக உள்ளது. எனவே கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை அமெரிக்க அதிபர் ட்ரம்ப் தலைமையிலான நிர்வாகம் எடுத்து வருகிறது.

இதனைத் தொடர்ந்து ஏப்ரல் 30ஆம் தேதி வரை அமெரிக்காவில் சமூக விலகலை மக்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று ட்ரம்ப் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பேசும்போது, கொரோனா வைரஸின் தாக்கம் வலுவாக உள்ளது. அமெரிக்காவில் 1 லட்சத்து 89 ஆயிரம் பேருக்கு கரோனா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது. அமெரிக்காவில் அடுத்து வரும் இரண்டு வாரங்கள் வலி நிறைந்தவையாக இருக்கும் என்று அமெரிக்க மக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

# கொரோனாவை அடக்க 49 நாள் முடக்கம் தேவை

## ஆய்வு முடிவில் தெரிவிப்பு

கொரோனா வைரஸை முழுமையாகக் கட்டுப்படுத்த 49 நாட்கள் தேவைப்படும் என்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் விஞ்ஞானிகள் இது தொடர்பாக ஆய்வு மேற்கொண்டுள்ளனர். இதில் கணிதவியல் ஆய்வு மாதிரியில் கரோனாவை முழுமையாகக் கட்டுப்படுத்த 49 நாள்கள் தேவைப்படும் என்று தெரிவிக்கின்றனர்.

கோட்பாட்டு பௌதீகத் துறையைச் சேர்ந்த அதிகாரி மற்றும் ராஜேஷ் சிங் என்ற இரண்டு ஆய்வாளர்கள் முதற்கட்டமாக 21 நாள் முடக்கம் என்பதை ஏற்றுக் கொள்கின்றனர். இது தொற்றுக்களின் எண்ணிக்கையைக் குறைக்க உதவுமே தவிர மீண்டும் கொரோனா தொற்றாது என்பதற்கான உறுதியை அளிக்கவல்லது அல்ல என்கின்றனர்.

21 நாள்கள் முடக்கத்திற்குப் பிறகு கட்டுப்பாடுகள் திடீரெனத் தளர்த்தப்பட்டால் கொரோனா தொற்று அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகம் என்கின்றனர் இவர்கள்.

இடைவெளியில்லாமல் 49 நாட்கள் தொடர் முடக்கம் என்றால் புதிய நோய்த் தொற்றை 10 சதவீத்துக்கும் கீழ் கொண்டு வர முடியும் என்று நம்பிக்கை கூறுகின்றனர் இந்த ஆய்வாளர்கள்.

காலைக்கதிர் Kalaikathir



# துப்புரவு தொழிலாளிக்கு காசு மாலை அணிவிப்பு

## பஞ்சாப்பில் நெகிழ்ச்சிச் சம்பவம்

கொரோனா வைரஸ் பரவிவரும் காலகட்டத்தில் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் பணியாற்றி வரும் துப்புரவுத் தொழிலாளிக்கு குடியிருப்பாளர் ஒருவர் ரூபாய் நோட்டு மாலை ஒன்றை அணிவித்த சம்பவம் இந்தியாவின் பஞ்சாப் மாநிலத்தில் செவ்வாய்க்கிழமை மாலை நடந்தது.

கொரோனாவைக் கட்டுப்படுத்தும் நோக்கோடு ஏப்ரல் 14ஆம் திகதி வரை இந்தியா முழுவதும் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதனால் மக்கள் அனைவரும் வீடுகளுக்குள் முடங்கியுள்ளனர். ஆங்காங்கே அத்து மீறல்கள் இருந்தாலும் பெரும்பாலானவர்கள் வீடுகளுக்குள் முடங்கியேயுள்ளனர்.

பஞ்சாப் மாநிலத்தில் பாட்டியாலா மாவட்டத்தில் நபா நகராட்சிப் பகுதியில் தங்கள் உயிரையும் பொருட்படுத்தாமல் நகர வீதிகளில் தூய்மைப் பணி மேற்கொற்கொண்டவர்களை அப்பகுதி மக்கள் கைதட்டி தங்கள் பாராட்டுதல்களைத் தெரிவித்தனர். அவர்கள் மீது மலர்களைப் பொழிந்தும் தங்கள் நன்றிகளைத் தெரிவித்தனர்.

இந்த நிகழ்ச்சி குறித்து பஞ்சாப் முதல்வர் அமரீந்தர் சிங் காணொலி ஒன்றை வெளியிட்டார். அதில் நாபா மக்கள் துப்புரவுப் பணியாளர்களுக்கு மாலைகளை அணிவித்துப் பாராட்டுவதைக் காண முடிந்தது.

குடியிருப்பாளர்களில் ஒருவர் நகராட்சி துப்புரவுப் பணியாளருக்கு ரூபாய் நோட்டு மாலை ஒன்றை அணிவிப்பதும் அதில் பதிவாகியுள்ளது.

"துப்புரவுத் தொழிலாளி மீது நாபா மக்கள் பொழிந்த கைதட்டலையும் பாசத்தையும் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். நம் அனைவரின் மனங்களிலும் உள்ள நல்ல சிந்தனைகளும் செயல்களும் இந்த துன்ப காலங்கள் எவ்வாறு வெளியே கொண்டுவருகிறது என்பதற்கு இந்த நிகழ்ச்சி ஓர் உதாரணம். கொவிட் – 19 க்கு எதிரான இந்தப் போரில் நம் முன்னணி வீரர்களை உற்சாகப்படுத்துவோம்". என்று முதலமைச்சர் அமரீந்தர் சிங் அந்தக் காணொலியுடன் தனது கருத்தையும் பதிந்துள்ளார்.



# 1,500 பேரைக் கடந்தது இந்தியாவில் தொற்று

கொரோனா வைரஸ் இந்தியாவில் தொற்றியுள்ளோர் எண்ணிக்கை மார்ச் 31 நிலவரப்படி ஆயிரத்து 637 ஆக உயர்ந்துள்ளன. உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 49 என்று சுகாதார அமைச்சகம் மற்றும் மாநில அரசுகளின் தரவுகள் தெரிவிக்கின்றன.

டெல்லி அரசு மருத்துவமனை மருத்துவருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளது. இந்தூரில் 19 புதிய கொரோனா தொற்றுக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாதிப்பு எண்ணிக்கை மத்தியப் பிரதேசத்தில் 63 ஆக அதிகரித்துள்ளது.

ராஜஸ்தானில் நேற்றுக் காலை 9 மணி வரை புதிய கொரோனா தொற்று எதுவும் இல்லை. இந்த மாநிலத்தில் மொத்தமாக 93 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

டெல்லி மசூதியில் வழிபாட்டுக்காக கூடியதாகக் கூறப்படுபவர்களில் வைரஸ் தொற்றுக்கு இலக்கானவர்களால் பாதிப்பு 128 என்று அரசு தரப்பு செய்திகள் தெரிவிகின்றன.

தப்லிக் மசூதி விவகாரத்தில் 2 ஆயிரத்து 137 பேரை அடையாளம் கண்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.. இவர்கள் பல்வேறு மாநிலங்களில் தனிமைப்படுத்தப்பட்டு மருத்துவ சோதனைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

# ஒரே நாளில் 110 பேருக்கு தமிழ் நாட்டில் தொற்று

தமிழ்நாட்டில் கொரோனா பாதித்தவர்களின் எண்ணிக்கை இன்று ஒரே நாளில் 110 பேருக்கு உறுதிசெய்யப்பட்டதை அடுத்து பாதிப்பின் மொத்த எண்ணிக்கை 234 ஆக உயர்ந்துள்ளது.

இதற்கிடையே, தலைநகர் டெல்லியில் உள்ள நிஜாமுதீன் என்ற பகுதியில் மார்ச் மாதம் 13 முதல் 15ஆம் திகதி வரை தப்லிகி ஜமாத் என்ற இஸ்லாமிய மத அமைப்பு சார்பில் கூட்டம் நடைபெற்றது. இதில் தமிழ்நாட்டில் இருந்து ஆயிரத்து 500 பேர் கலந்து கொண்டனர். இந்தக் கூட்டத்தில் கலந்து கொண்ட 8 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதனால் ஆயிரத்து 500 பேரையும் தனிமைப்படுத்த தமிழக அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. இதில் நேற்று வரை 500க்கும் மேற்பட்டோரை அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அவர்களில் 45க்கும் மேற்பட்டோருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டதால், ஒரே நாளில் 57 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது உறுதிசெய்யப்பட்டது. இதனால் எண்ணிக்கை 124 ஆக உயர்ந்தது.

இந்த நிலையில் டெல்லியில் இருந்து வந்தவர்களில் இன்று 110 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று இருப்பது தெரியவந்துள்ளது. இதனால் தமிழகத்தில் கொரோனா வைரசால் தாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 234 ஆக உயர்ந்துள்ளது.

### கொரோனாவால் நிர்க்கதியாகியுள்ள ஏழை மக்கள்

# ஆறரை லட்சம் பேர் முகாம்களில் தஞ்சம்

இந்தியாவில் கொரோனாவைக் கட்டுப்படுத்த ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டதை அடுத்து நிர்க்கதியாகியுள்ள 6 லட்சத்து 60 ஆயிரம் உள்ளூரிலேயே இடம்பெயர்ந்த தொழிலாளர்கள் மற்றும் அவர்களின் குடும்பத்தினர் 21 ஆயிரம் இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த முகாம்களில் நாள்தோறும் 23 லட்சம் பேருக்கு உணவு வழங்கப்படுகிறது என்றும் இந்திய அரசு தெரிவித்தது.

"ஊரடங்கு சூழ்நிலையை மாநிலங்களுடன் இணைந்து மத்திய உள்துறை அமைச்சகம் கண்காணித்து வருகிறது. இதுவரை நிலைமை திருப்திகரமாக உள்ளது. அத்தியாவசிய பொருட்கள் விநியோகம் திருப்திகரமாக நடந்து வருகிறது.

மாநிலங்களுக்கிடையிலான சரக்கு போக்குவரத்து, சுமூகமாக நடந்து வருகிறது. ஊரடங்கு உறுதியாக அமல்படுத்தப்படும் என்று நம்புகிறோம்." என்று தெரிவித்தார் மத்திய உள்துறை அமைச்சக இணை செயலாளர் புண்ய சலிலா ஸ்ரீவஸ்தவா.

### கொரோனா தடுப்புப் பணியின்போது

# மருத்துவ பணியாளர்கள் உயிரிழந்தால் ரூ. 1 கோடி

## டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் அறிவிப்பு

டில்லி, ஏப்.02

கொரோனா நோயாளிகளைக் காப்பாற்றும் பணியில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், தாதியர்கள், துப்புரவு பணியாளர்கள் உயிரிழந்தால் குடும்பத்துக்கு 1 கோடி ரூபாய் (இந்திய மதிப்பில்) வழங்கப்படும் என டெல்லி முதல்வர் அரவிந்த் கேஜ்ரிவால் அறிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தீவிரமடைந்து வருகிறது. கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்டு தனிமைப் படுத்தப் படுவோர், அறிகுறிகளுடன் கண்காணிப்பில் இருப்போர் அதிகரித்து வருகின்றனர். அவர்களுக்குச் சிகிச்சையளித்துப் பராமரிப்பவர்களுக்கும் நோய் தொற்றக்கூடிய அபாயம் இருக்கிறது.

"கொரோனா நோயாளிகளைக் குணப்படுத்தும் நடவடிக்கையில் ஏராளமான மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவப் பணியாளர்கள் சேவையாற்றுகின்றனர்.

அதுபோலவே சுகாதார பணிகளில் ஏராளமான துப்புரவு தொழிலாளர்களும் ஈடுபட்டுள்ளனர்.

இந்த பணிகளின் போது அவர்களுக்கு மரணம் ஏற்பட்டால் அவர்களது குடும்பங்களுக்கு 1 கோடி ரூபாய் வழங்கப்படும்.

அரசு மற்றுமின்றி தனியார் துறை ஊழியர்களும் கொரோனா ஒழிப்பு நடவடிக்கையின்போது உயிரிழந்தால் அவர்கள் குடும்பங்களுக்கும் ஒரு கோடி ரூபாய் வழங்கப்படும்" என டெல்லி முதலமைச்சர் கெஜ்ரிவால் கூறினார்.

# முதலமைச்சர்களுடன் மோடி இன்று பேச்சு

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து மாநில முதலமைச்சர்களுடனும் இந்தியப் பிரதமர் மோடி இன்று வீடியோ கான்பரன்சில் கலந்துரையாடுகிறார்.

கொரோனா தடுப்பு நடவடிக்கையாக இந்தியாவில் 21 நாள் ஊரடங்கு நடைமுறையில் உள்ளது. கொரோனா தடுப்பு நடவடிக்கைக்காக நாட்டு மக்கள் நிதி அளிக்கலாம் என பிரதமர் மோடி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்த நிலையில், கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அனைத்து முதலமைச்சர்களுடனும் பிரதமர் மோடி இன்று வீடியோ கான்பரன்சில் ஆலோசனை நடத்த உள்ளார் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மத்திய உள்துறை அமைச்சக இணை செயலாளர் புண்ய சலிலா ஸ்ரீவஸ்தவா இதனைத் தெரிவித்தார்.

# 10 லட்சம் கொரோனா நிதி வழங்கிய யூ ரியூப் பிரபலம்

இந்தியாவில் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தாக்கத்தைக் கட்டுப்படுத்துவதற்கும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களை எதிர்கொள்வதற்குமாகப் பொது மக்கள் நிதி உதவி அளிக்க வேண்டும் என்று பிரதமர் மோடி விடுத்த அழைப்பை ஏற்று டெல்லியைச் சேர்ந்த யூ ரியூப் பிரபலம் 10 லட்சம் ரூபாய் (இந்திய மதிப்பில்) நிதி உதவி வழங்கியுள்ளார்.

தன்னுடைய ஒரு மாத வருமானத்தை அவர் அப்படியே நிதி உதவியாக வழங்கியிருக்கிறார். கோடிக்கணக்கில் சம்பாதிக்கும் சினிமா மற்றும் கிரிக்கெட் பிரபலங்களே சில பல லட்சங்கள் நிதியையே வழங்கி வரும் நிலையில் யூ ரியூப் பிரபலம் இவ்வளவு பெரிய தொகையை வழங்கியிருப்பது பலரையும் கவனிக்க வைத்திருக்கிறது.

டெல்லியைச் சேர்ந்த யூ டியூப் பிரபலமும், நகைச்சுவை கலைஞனுமான புவன் பாம், மார்ச் மாதம் முழுவதும் தனது யூ டியூப் அலைவரிசை மூலம் கிடைத்த வருமானத்தை கொரோனா வைரஸ் பாதிப்புக்கு வழங்கியுள்ளார்.

26 வயதாகும் புவன், பிரதமர் நிவாரண நிதிக்கு ரூ.. 4 லட்சம், முதலமைச்சர் நிவாரண நிதிக்கு ரூ.. 4 லட்சம், ஃபீடிங் இந்தியா என்ற அமைப்புக்கு ரூ. 2 லட்சமும் வழங்கியுள்ளார்.

"பொதுவாக இது போன்ற வியங்களை நான் பேசுவது கிடையாது. ஆனால், நமது நாட்டுக்கு நமது உதவி இப்போது தேவை. அனைவருக்கும் உதவ நாம் இப்போது தயாராக வேண்டும். அதுதான் முக்கியம். பிரதமர் நிவாரண நிதி, முதலமைச்சர் நிவாரண நிதி, ஃபீடிங் இந்தியா ஆகியவற்றுக்கு எனது பங்களிப்பைச் செய்துள்ளேன். தங்கள் உயிரைப் பணயம் வைத்து நாட்டுக்காக உழைப்பவர்களுக்கு இப்படித்தான் என்னால் திருப்பிச் செய்ய முடியும்". இவ்வாறு புவன் கூறியுள்ளார். புவனின் 'யூ டியூப் சேனலுக்கு 1.6 கோடி பேர் சந்தாதாரர்களாக உள்ளனர்.

காலைக்கதிர்
Kalaikathir


# கொரோனா வைரஸ் அச்சங்களுக்கு நடுவில் உங்கள் மனநலத்தை பாதுகாப்பது எப்படி?

கிறிஸ்டி ப்ருவர் - பி.பி.ஸி

கொரோனா வைரஸ் உலகையே நிச்சயமற்ற நிலைக்கு தள்ளியுள்ளது. மேலும் கொரோனா தொற்று பரவும் செய்திகள் நம்மிடம் இடைவெளி இல்லாமல் வந்து சேர்கிறது.

இதனால் இயல்பாகவே பதற்றம் அடைபவர்கள் மற்றும் ஒரே செயலை பலமுறை செய்ய தூண்டும் ஓ.சி.டி (Obsessive - compulsive disorder) எனப்படும் மனநோய் உள்ளவர்கள் பெரும் பாதிப்புக்கு ஆளாகின்றனர்.

செய்திகள் மற்றும் கொரோனா குறித்து படிப்பதை கட்டுப்படுத்துங்கள்.

கொரோனா வைரஸ் குறித்துத் தினமும் கேட்கும் செய்திகள் நமக்கு கவலை அளிப்பதை புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் ஏற்கனவே மனதளவில் பாதிக்கப்பட்டவர்களை இந்த செய்திகள் இன்னும் அதிகம் பாதிப்படைய செய்யும்.

கொரோனா வைரஸ் தாக்கம் பரவத் தொடங்கியபோது உலக சுகாதார நிறுவனம் மன நிலையை பாதுகாப்பது குறித்த ஆலோசனைகளை வழங்கியது. இந்த ஆலோசனைகள் சமூக வலைதளத்தில் அதிகம் வரவேற்கப்பட்டன.

பதற்றம் அடைபவர்கள் குறித்து பிரிட்டனின்



நிக்கி லிட்பெட்டர் கூறுகையில், ”கட்டுப்பாட்டை மீறி நிலைமை மோசமடையும்போது ஏற்படும் அச்சம், நிச்சயமற்ற தன்மையை பொறுத்துக்கொள்ளமுடியாமல் ஏற்படும் கவலை, இவை இரண்டும்தான் நாம் பதற்றம் அடைய காரணமாக உள்ளன” என்கிறார். ”எனவே இயல்பாகவே பதற்றத்துடன் இருக்கும் நபர்களுக்கு இந்த சூழ்நிலையை எதிர்கொள்வது மிகப் பெரிய சவாலாக இருக்கும் என்பதை புரிந்துகொள்ள முடிகிறது,” என்றும் கூறுகின்றார்.

”நாம் அறியாத பல வியங்கள் குறித்த்த்தான் பொதுவாகப் பதற்றம் ஏற்படும். ஏதாவது நடந்து விடுமோ என்ற உணர்வில்தான் பதற்றம் வேரூன்றி இருக்கிறது,” என்கிறார் மனநிலைக்கான அறக்கட்டளை ஒன்றின் செயற்பாட்டாளர் ரோஸி.

செய்திகளைப் படிக்கும்போது கவனம் தேவை. கேண்டில் வசிக்கும் இரண்டு குழந்தைகளுக்கு தந்தையான நிக், கொரோனா வைரஸ் குறித்து அதிக செய்திகளைப் படிப்பதே கவலை அளிக்கிறது என்கிறார். ”நான் கவலை அடையும்போது, என் எண்ணங்கள் கட்டுப்பாட்டை மீறி, பேரழிவின் விளைவுகள் மீது செல்லத் தொடங்கியது,” எனக் கூறுகிறார். மேலும் தனது பெற்றோர்கள் மற்றும் தனக்குத் தெரிந்த முதியவர்களின் நிலை குறித்தும் கவலையாக இருக்கிறது என்றும் சொன்னார்.

”பொதுவாக கவலையில் இருந்தால், அந்த இடத்தை விட்டு நகர்ந்து செல்வேன். ஆனால் தற்போது அப்படி செய்ய முடியவில்லை,” என்கிறார்.

இணையத்தில் செய்திகளைப் படிப்பது மற்றும் சமூக ஊடகம் ஆகியவற்றில் இருந்து விலகி இருப்பது உள்ளிட்ட சில அறிவுரைகளை நிக் கடைபிடித்தமையால், தான் தற்போது நல்ல மனநிலையில் இருக்கிறார் என அவர் தெரிவிக்கிறார்.

உங்களைப் பாதிக்கக்கூடிய செய்திகளைக் காண்பதையும் படிப்பதையும் தவிருங்கள். மாறாக அடிப்படை செய்திகளை அறிய குறிப்பிட்ட நேரம் ஒதுக்கி அந்த நேரத்தில் மட்டும் செய்திகளைககவனியுங்கள்.

நிறைய தவறான தகவல்கள் மற்றும் வதந்திகள் பரவிவருகின்றன. எனவே சரியான செய்திகளை ஒளிப்பரப்பும் ஊடகம் அல்லது அரசாங்கம் வெளியிடும் தகவல்களை மட்டும் நம்புங்கள்.

சமூக ஊடகத்தில் இருந்து விலகி இருங்கள்.

சமூக வலைத்தளம் அதிகம் வேண்டாம்.

மான்செஸ்டரில் வசிக்கும் அலிசன், ஆரம்பத்தில் கொரோனா வைரஸ் குறித்த அனைத்து செய்திகளையும் படித்துத் தொடர்ந்து தனது ட்விட்டர் பக்கத்தில் கொரோனா வைரஸ் தொடர்பாக இருந்த எல்லா ஹாஸ்டேகுகளையும் பின் தொடர்ந்துள்ளார். ஆனால் நாளடைவில் இதனால் மனம் வருந்தி பல முறை அழுதார் எனக் கூறுகிறார்.

எனவே தற்போது சமூக ஊடகத்தில் அதிக நேரம் செலவிடாமல், விலகி இருக்கிறார் எனவும், தமக்கு கவலை அளிக்கும் எந்த செய்திகளையும் பார்ப்பதில்லை என்றும் அவர் கூறுகிறார்.

கொரோனா வைரஸ் குறித்து அடிக்கடி தகவல்களை வெளியிடும் வாட்ஸ் ஆப்



குருப்புகளை மியூட் செய்யவும்.

பேஸ்புக்கில் உங்கள் மனதைக் காயப்படுத்தும் பதிவுகளை ஹைட் செய்யுங்கள்.

ஓ.சி.டி எனப்படும் ஒரு செயலை பலமுறை செய்ய தூண்டும் மனநோய்க்கு ஆளாகி, தேவையான ஆலோசனைகள் பெற்று தங்களை மாற்றிக்கொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தவர்களுக்கு தற்போது குழப்பம் நிலவுகிறது.

குறிப்பாக ஓ.சி.டி யால் பாதிக்கப்பட்டவர்களில் ஒருவகையினர் அடிக்கடி கை கழுவும் பழக்கத்தை மேடவர்களாக இருப்பார்கள். அவர்கள் அடிக்கடி கை கழுவும் பழக்கத்தை தவிர்க்கும் முயற்சியில் ஈடுபட்டிருப்பார்கள். ஆனால் இந்தக் கொரோனா வைரஸ் பாதிப்பால் அவர்களுக்குள் தற்போது குழப்பம் நிலவும்.

மேலும் கொரோனா வைரஸ் பாதிப்பை தவிர்க்க தற்போது அவர்கள் மீண்டும் சோப் மற்றும் சானிடைசர் பயன்படுத்த ஆரம்பித்தால், பிறகு மீண்டும் அந்த பழக்கத்தில் இருந்து விடுபடுவது சவாலாக இருக்கும்.

எந்த வகையான ஓ.சி.டி யால் பாதிக்



கப்பட்டவர்களாக இருந்தாலும் ஒரு கட்டத்தில் தங்களை திசைத்திருப்பி கொள்ள வெளியில் செல்வார்கள். ஆனால் தற்போது அவர்களை திசைத்திருப்பிக்கொள்ளவும் வாய்ப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவும் வேகம் அதிகரித்து வரும் இந்தச் சூழலில் பலர் தங்களை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் நேரலாம். எனவே இந்த நேரத்தில் நீங்கள் அக்கறைகொள்ளும் அனைத்து நண்பர்களின் தொலைபேசி எண்கள் மற்றும் மின் அஞ்சல் முகவரியை கேட்டுவாங்கிக்கொள்ளுங்கள். அவர்களுடன் உரையாட நேரம் ஒதுக்குங்கள்.

கொரோனா வைரஸ் பரவும் வேகம் அதிகரித்து வரும் இந்தச் சூழலில் பலர் தங்களை தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டிய அவசியம் நேரலாம். எனவே இந்த நேரத்தில் நீங்கள் அக்கறைகொள்ளும் அனைத்து நண்பர்களின் தொலைபேசி எண்கள் மற்றும் மின் அஞ்சல் முகவரியை கேட்டுவாங்கிக்கொள்ளுங்கள். அவர்களுடன் உரையாட நேரம் ஒதுக்குங்கள்.

நீங்கள் தனிமைப்பட்டிருந்தால் உங்களுக்கென சில வேலைகளைப் பட்டியலிட்டு கொள்ளுங்கள்.

ஒவ்வொருநாளும் வெவ்வேறு பனிகளில் ஈடுபடுங்கள். இதனால் இறுதியில் உங்கள் தனிமையான நாள்களை நீங்கள் சரியாகப் பயன்படுத்தினீர்கள் என்ற நிறைவு ஏற்படும்.

உங்கள் மனம் இயற்கையை அணுகட்டும்

இயற்கையையும் சூரிய ஒளியையும் முடிந்தவரை உங்கள் மனம் அணுகட்டும். நல்ல உணவு உண்ணுங்கள், நிறைய தண்ணீர் குடிங்கள், நல்ல உடற்பயிற்சி செய்யுங்கள்.

நீங்கள் சாதாரணமாக செயல்படுவதைப் போல செயல்பட வேண்டாம். சிறிதும் எதிர்வினையாற்றவேண்டாம். அமைதி காக்கவும்.

நீங்கள் நினைக்கும் அனைத்தும் சரி தான் என்று நம்பாதீர்கள். அது வெறும் உணர்வோ, யோசனையோ மட்டும்தான்.

உங்கள் எண்ணங்களுக்கும் உணர்வுகளுக்கும் எதிர்வினையாற்றத் தேவையில்லை.

இந்த தருணத்தை பற்றி மட்டும் சிந்தியுங்கள். ஏனென்றால் இந்த தருணம் நன்றாகத்தான் உள்ளது.

# பல மருத்துவ உபகரணங்களை இலங்கைக்கு வழங்கியது சீனா!

கொரோனா வைரஸ் தடுப்புக்காக சீனா, இலங்கைக்கு சுமார் ஐந்து கோடி ரூபா பெறுமதியான மருத்துவ உபகரணங்களை வழங்கியுள்ளது.

இந்த மருத்துவ உபகரணங்களை நேற்று இலங்கை அரசாங்கத்திடம் கையளிக் கப்பட்டது.

சுவாச சீராக்கி உபகரணம், செயற்கை சுவாச உயிர்ப்பு அமைப்பு, நாடித்துடிப்பு பார்க் கும் உபகரணம், வெப்பமானி, கதிரியக்க உபகரணங்கள், உட்செலுத்தும் குழாய் மற் றும் இருதய மின்னலை வரைவு உபகரணம் என்பன இவ்வாறு வழங்கப்பட்டுள்ளன.

சீன தூதகத்தினால் இலங்கையின் சுகாதார அமைச்சிடம் இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டன. அத்துடன் ஆசியாவின் முதல் பணக்காரரான ஜெக் மா அறிவித்தி ருந்த முகக்கவசங்களும் இன்று வழங்கப் பட்டன.

இதேவேளை, இலங்கையில் இது வரையில், 146 பேர் கொரோனா வைரஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இருவர் உயிரிழந்துள்ளனர்.

மேலும் 18 பேர் பூரணமாக குணமடைந்து வீடு சென்றுள்ளனர். மேலும் 126 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றமை குறிப்பிடத் தக்கது.

# அத்தியாவசியப் பொருள்களாக கோழி, விஸ்கி, சிகரெட் கடத்தல்

## பொலிஸாரிடம் மூவர் வசமாகச் சிக்கினர்

கொழும்பு,ஏப்.02

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகு பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் பல்வேறு நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. இந்நிலையில் நாடு முழுவது ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில் சட்டத்தை மீறுவோரை கைதுசெய்வதற்கு பல இடங்களிலும் வீதிசோதனை சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

எனினும், ஊரடங்கு சட்டம் அமுலில் இருக்கும் போது, அத்தியாவசிய பொருள்களை ஏற்றியிறக்குவதற்கு விசேட அனுமதிகளும் வழங்கப்படுகின்ற நிலையில் இந்த அனுமதியை பெற்றுக்கொண்ட பலர், சட்டவிரோத மான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளமை கண்டறி யப்பட்டது.

அந்தவகையில், அத்தியாவசிய தேவையென அறிவித்து, அதிகூடிய குளிரூட்டப்பட்ட லொறியில், கோழி இறைச்சியை சிலர் ஏற்றி சென்றனுள்ளனர்.

அத்துடன் கோழி இறைச்சிக்குள் விஸ்கி உள்ளிட்ட வெளிநாட்டு மதுபானங்கள் மற்றும் சிகரட் வகைகளை மறைத்து வைத்து, ஏற்றிவந்த மூவர் ரத்தொழுகம பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டனர்.

ஜா – எலயில் இருந்து ரத்தொழுகமவுக்கு இவ்வாறு ஏற்றிவந்த போதே, இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தமக்குக் கிடைத்த இரகசிய தகவலையடுத்தே, இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனத் தெரிவித்த பொலி ஸார், அவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற் கும் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர் எனவும் தெரி வித்தனர்.

# அடுத்த 2 வாரங்களில் காத்திருக்கும் ஆபத்து!

கொழும்பு, ஏப். 03

இலங்கையில் அடுத்த 2 வாரங்களில் கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை நூற்றுக்கணக்கில் அதிகரிக்க லாம் என வைத்திய பரிசோத னைச் சபையின் பணிப்பாளர் வைத்தியர் ஜெயருவான் பண் டார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில் –

ஆரம்பத்தில் ஒருவர் இரு வர் என்ற வகையில் நாட்டில் கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட்டனர். முதலில் இது ஒருவரிடம் இருந்து ஒரு வருக்கு பரவும் விதமாகவே கண்டறியப்பட்டது. தனி நபர் களைக் கண்டறிந்து நிலைமை களைக் கட்டுப்படுத்த எமக்கு இலகுவாக இருந்தது.

கொழும்பு, புத்தளம் ஆகிய பகுதிகளில் அவர்கள் வசித் தனர் எனக் கூறப்பட்ட நிலை யில் ஒரு சில நாள்களின் பின்னர் அந்தப் பகுதிகளில் கொரோனா தொற்றாளர்க ளின் எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது.

அதேபோல் இப்போது நாட் டில் வெவ்வேறு பகுதிகளில் ஒருவர் இருவர் என்ற அடிப்ப டையில் கொரோனா தொற்றா ளர்கள் அடையாளம் காணப்ப டுகின்றனர்.

இந்த எண்ணிக்கை வெகு விரைவாக அதிகரிக்கக் கூடிய வாய்ப்புகள் உள்ளது.

உலக நாடுகளில் ஆரம் பத்தில் அதாவது கொரோனா தொற்றாளர்கள் குறித்து முதல் வாரங்களில் மிகவும் மெது வான உயர்வுநிலை காணப் பட்ட போதிலும் பின்னர் மிக வேகமாக அந்த நாடுகளில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கையும் மரண வீத வும் அதிகரித்தது.

உலக சுகாதார மையத் தின் கொரோனா வரைபட நிர லைப் பார்கையில் இன்று மிக வும் உயரிய தாக்கத்தை அது காட்டுகின்றது. அதேபோன்று இலங்கையிலும் அவ்வாறான அச்சுறுத்தல் உள்ளது.

முதல் சில வாரங்களில் மிகவும் மெதுவாக கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப்பட் டாலும் கூட அடுத்த ஒரு இரு வாரங்களில் மிகவேகமாக பரவக்கூடிய நிலைமை இருப்ப தாக நாம் கருதுகின்றோம்.

இது சாதாரண விடயமாகக் கருத முடியாது. இது நாட்டுக்கு மிகவும் அச்சுறுத்தலான விட யமாகும். இதற்கான காரணம் எமது சமூகத்தில் கலந்துள்ள கொரோனா தொற்றாளர்கள் இன்று கொரோனா வைரஸை சமூகத்தில் பரப்ப ஆரம்பித் துள்ளனர்.

ஆகவேதான் அடுத்த இரு வாரங்கள் மிகவும் அச்சுறுத் தலான காலமாக நாம் கருது கின்றோம். ஒரே நேரத்தில் நூற் றுக்கணக்கான கொரோனா தொற்றாளர்கள் கண்டறியப் பட அதிக வாய்ப்புக்கள் உள் ளது.

ஆகவே இதிலிருந்து விடுபடவேண்டுமானால் அதில் பிரதான பங்களிப்பை பொது மக்களே முன்னெடுக்க வேண் டும். தாமாக நோயைக் காவும் செயற்பாடுகளைக் கைவிட்டு மிகவும் அவதானமாக இருக்க முடியுமென்றால் அதுவே சிறந்த வழிமுறையாகும்.

சமூகஇடைவெளியைமுழு தளவு கையாண்டு தம்மைத் தாமே தனிமைப்படுத்திக் கொள்ள வேண்டும். இரண்டு கைகளை நீட்டும் தோற்றத் தில் எந்தவொரு நபரையும் நெருங்க விடவேண்டாம் – என்றார்.

# இருபாலை தெற்கில் திங்களன்று நிவாரணப் பொருள்கள் வழங்கல்





இருபாலை, ஏப்ரல் 01

கொரோனா அசாதாரண சூழ் நிலையால் அவதியுறும் – உதவி தேவைப்படும் – 155 குடும்பங்க ளுக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இருபாலை தெற்கு கிராம அபி விருத்தி சங்கத்தின் ஒருங்கிணைப் பில் கடந்த திங்கட்கிழமை இடம் பெற்ற இந்நிகழ்வில், இருபாலை தெற்கைச் சேர்ந்த உதவி தேவைப் படும் கிராமங்களுக்கே இந்த உலர் உணவுப் பொருள்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த உலர் உணவுப் பொருள் களை வழங்குவதற்காக இருபாலை தெற்கு கிராம சக்தி மக்கள் சங்கம் 50 ஆயிரம் ரூபாவையும், வட மாகாண சபை அவைத்தலைவர் சி.வீ.கே. சிவஞானம் 40 ஆயிரம் ரூபாவையும், முன்னாள் நாடாளு மன்ற உறுப்பினர் த.சித்தார்த் தன், இருபாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கம் தலா 25 ஆயி ரம் ரூபாவையும், மக்கள் ஆதரவு மையம் 10 ஆயிரம் ரூபாவையும் உதயம் கலாசார சங்கம் (கனடா) 5 ஆயிரம் ரூபாவையும் வழங்கி உதவின என இருபாலை தெற்கு கிராம அபிவிருத்தி சங்கம் தெரி வித்தது.

இந்த உலர் உணவுப் பொருள்கள் அனைத்தும் உரிய சுகாதார விதி முறைகளைப் பின்பற்றி வழங் கப்பட்டது என்றும் தெரிவிக்கப் பட்டது.

northern PC PARK
வடக்கின் கணினிப்பூங்கா
கணினி உலகில் நம்பகமான சேவையில்
15 வருடங்களுக்கு மேலாக யாழ் மண்ணில்
# 10, Muddaskadai Junction, Stanley Road, Jaffna.
Northern Pc Park
NPcpark
northernpcpark
Northern PC Park
077 757 0124 021 567 5566
077 336 6443 021 222 9581
075 555 7327 021 222 2050
071 777 2377 021 222 0388
info@pcpark.co
www.pcpark.co
Hot Line:- 077 777 1545

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE
உலகெங்குமிருந்து
உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.
உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப
WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.
No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# வரலாற்றில் மிகவும் மோசமான சரிவை சந்தித்த இலங்கை ரூபாயின் பெறுமதி



கொழும்பு,ஏப்.02

அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கை ரூபாவின் பெறுமதி வரலாற்றில் மிக மோசமான வீழ்ச்சியை நேற்றுப் பதிவு செய்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கைக்கமைய இந்த விடயம் தெரியவந்துள்ளது.

அதற்கமைய நேற்றைய தினம் டொலர் ஒன்றின் விற்பனை விலை 192.65 ரூபாவாக பதிவாகியுள்ளது.

அத்துடன் டொலர் ஒன்றின் கொள்வனவு விலை 187.55 ரூபாவாக பதிவாகியுள்ளதாக குறிப்பிடப்படுகின்றது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் தீவிரமடைந்துள்ளது. அதன் தாக்கம், ரூபா மற்றும் தங்கத்தின் பெறுமதி மீது அழுத்தம் ஏற்படுத்தியுள்ளதாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

# மைத்திரியின் ஊடகப் பிரிவில் பணியாற்றியவரும் கைதானார்

## போலி செய்திகளைப் பரப்பினர் என்று

கொழும்பு, ஏப். 03

சமூக வலைத்தளங்களில் தவறான தகவல்களை வெளியிட்ட குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஊடகப் பிரிவில் பணியாற்றிய அதிகாரி ஒருவரும் அடங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பேருவளைப் பகுதியிலுள்ள முஸ்லீம் பள்ளிவாசலில் அதிக எண்ணிக்கையிலானவர்கள் பங்கேற்ற நிகழ்வொன்றின் காணொலி எனத் தெரிவித்து பொய்யான தகவலை பதிவிட்டமை தொடர்பில் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

எனினும் அந்தக் காணொலி உண்மையானது அல்லவென தேசிய கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கை நிலையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண கூறியுள்ளார்.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறும் வகையில் நடத்தப்பட்ட இந்த நிகழ்வு தொடர்பில், பொலிஸார் எந்தவொரு நடவடிக்கையையும் எடுக்கவில்லை எனவும் பொலிஸார் மற்றும் சுகாதார அதிகாரிகள் இதுபோன்ற நிகழ்வுகளை அனுமதித்துள்ளனர் எனவும் குறித்த காணொலி பதிவில் குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

இந்தக் காணொலி தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவு விசேட விசாரணைகளை முன்னெடுத்திருந்ததுடன், அந்தக் காணொலி முற்றுமுழுதாகப் பொய்யானது என்பதுடன், பல மாதங்களுக்கு முன்னர் அது எடுக்கப்பட்டது என்பதும் தெரியவந்துள்ளதாக பிரதிப் பொலிஸ் மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

இதன்பிரகாரம் சந்தேகநபர்கள் இருவர் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பிலுள்ள தனியார் வைத்தியசாலையில் குழந்தையொன்றை பிரசவித்த தாய் மற்றும் அவரின் குழந்தைக்கு கொரோனா தொற்று ஏற்பட்டுள்ளதாக சமூக வலைத்தளத்தில் வதந்தை பரப்பிய குற்றச்சாட்டில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் ஊடகப் பிரிவில் பணியாற்றிய ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

கொழும்பிலுள்ள பிரபலமான தனியார் வைத்தியசாலையில் கொரோனா தொற்று உள்ளதாக பேஸ்புக் பக்கத்தில் வெளியிடப்பட்ட தகவல் குறித்து அந்த வைத்தியசாலை நிர்வாகத்தினரால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கமைய மார்ச் மாதம் 28ஆம் திகதி ஊடகவியலாளரான நுவன் நிரோத என்ற நபர் குருநாகல் பிரதேசத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டார் எனப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இதனையடுத்து குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் நீதவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என அஜித் ரோஹண மேலும் குறிப்பிட்டார்.


சசிகா லேனர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றத் தரப்படும்.

தலைமை காரியாலயம்,
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலனை
வங்களாவடிச் சந்தி,
வேலணை
021 221 5472
070 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

கே.கே.எஸ்.வீதி,
மல்லாகம்.
021 224 3393
070 301 3014

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

சங்கானை
ஒடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

பருத்தித்துரை வீதி,
நெல்லியடி
021 226 0999
071 775 0999

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு
கோபுர வீதி,
யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை
பின்புறமாக)
021 221 5472
07 301 3012





# கடற்படை ஒத்துழைப்புடன் நயினாதீவுக்குப் பொருள்கள்

யாழ்ப்பாணம்,ஏப்.02

யாழ்ப்பாணம், நயினாதீவுக்கு அத்தியாவசிய உணவுப் பொருள்களைக் கொண்டு செல்ல இலங்கை கடற்படை தனது பங்களிப்பை வழங்கியது.

கொரோனா வைரஸ் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக அரசாங்கம் முன்னெடுத்துள்ள வேலை த்திட்டங்களின் கீழ் அத்தியாவசிய உணவு மற்றும் வீட்டுப் பொருள்களை வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்கமைய, சதொச விற்பனை நிலையங்கள் மூலம் நயினாதீவு மக்களுக்கு அத்தியாவசிய பொருள்களை விநியோகிக்கும் திட்டமொன்றும் இடம்பெற்று வருகிறது.

இத்திட்டத்தை செயல்படுத்தத் தேவையான கடல் போக்குவரத்து வசதிகள், கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியல் டி சில்வாவின் உத்தரவின் கீழ் கடற்படை பிரதித் தலைமை அதிகாரி மற்றும் வடக்கு கடற்படை கட்டளையின் தளபதி ரியர் அட்மிரல் கபில சமரவீரவின் மேற்பார்வையின் கீழ் வடக்கு கடறப்படை வீரர்களால் மேற்கொள்ளப்பட்டன.

# வெளிநாடுகளில் இருந்து வந்த 2,913 பேர் நேற்று வரைப் பதிவு

கொழும்பு,ஏப்.02

வெளிநாடுகளிலிருந்து இலங்கைக்கு வந்திருக்கும் 2 ஆயிரத்து 913 பேர் தனிமைப்படுத்தலுக்காக பதிவு செய்து கொண்டுள்ளனர் என பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இவர்கள் கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதி முதல் வெளிநாடுகளுக்கான விமான சேவைகள் இரத்து செய்யப்படும் வரை இலங்கைக்கு வருகை தந்தவர்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து கடந்த மார்ச் மாதம் 16 ஆம் திகதிக்கு முதல் இலங்கைக்கு வருகை தந்தவர்களை பதிவு செய்வதற்கு இன்று வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்ததோடு பதிவு செய்யாதவர்கள் தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் தனிமைப்படுத்தலில் இருந்து இடைவிலகியோர் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளன எனவும் அவர்களைக் கைது செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

இதற்கமைய நேற்று நண்பகல் 12 மணி வரை பதிவு செய்துகொண்டவர்களின் விவரங்களுக்கு அமைய 2,913 பேர் இலங்கைக்கு வருகை தந் துள்ளனர் என பிரதி பொலிஸ் அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

# கொழும்பில் விசேட சோதனை நடவடிக்கை!



பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் கொழும்பில் 16 வீதித்தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண இந்த விடயத்தினைக் குறிப்பிட்டுள்ளார்.

விசேட பாதுகாப்பு நடவடிக்கைகள் கொழும்பு நகரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமையவே பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் ஊடாக கொழும்பு நகரில் 16 வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன.

கொழும்பு நகருக்கு உட்பிரவேசிக்கும் பகுதிகளில் இந்த வீதித் தடைகள் அமைக்கப்பட்டுள்ளன எனப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோகண தெரிவித்துள்ளார்.

கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் அனைத்து வாகனங்களுக்குமான பொலிஸ் ஊரடங்கு அனுமதி பத்திரம் மற்றும் வாகன அனுமதிபத்திரம் என்பன குறித்த இடங்களில் நிச்சயமாக கண்காணிக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் கடந்த 20 ஆம் திகதி மாலை 06 மணிக்கு அமுல்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் கொழும்பு, கம்பஹா, களுத்துறை, புத்தளம், கண்டி மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டங்களுக்கு கடந்த 24 அன்று மட்டுமே தளர்த்தப்பட்டது.

அதன் பின்னர் குறித்த பகுதிகளில் மறு அறிவித்தல் வரும் வரையில் ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

காலைக்கதிர் Kalaikathir

மழைக் காலம்




தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

இன்று (02/04/2020) தலைப்பு
மழைக் காலம்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப்படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# தங்காலையில் ஹோட்டல் நேற்று இழுத்து மூடப்பட்டது

கொரோனா தொற்றுக்குள்ளான நிலையில் ஒருவர் கண்டு பிடிக்கப்பட்டதை அடுத்து தங்காலையில் அமைந்துள்ள ஹோட்டலொன்று இழுத்து மூடப்பட்டுள்ளது.

இந்த தகவலை தங்காலை பொது சுகாதார பரிசோதகர் ஜகத் கஜதீர உறுதிப்படுத்தியுள்ளார்.

கொரோனா தொற்றுக்குள்ளானவர் சுற்றுலா வழிகாட்டி எனவும் கடந்த 15 மற்றும் 16 ஆம் திகதிகளில் அவர் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுடன் குறித்த ஹோட்டலுக்கு வருகை தந்திருந்தார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அந்த சுற்றுலா வழிகாட்டிக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் நேற்று வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ஊரடங்குச் சட்டத்தை மீறியமைக்காக நேற்றுக் கொழும்பில் 195 பேர் கைது!

நேற்று மாத்திரம் கொழும்பு பகுதியில் வைத்து பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறிய 195 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 110 வாகனங்கள் கைப்பற்றப்பட்டன எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட வாகனங்கள் கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் நீங்கும் வரையில் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்படமாட்டாது எனவும் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

# தவறான தகவல், காணொளி பதிவேற்றுவோர் கைதாவர்!

கொழும்பு, ஏப். 03

கொரோனாவை ஒழிப்பதற்காக அர்ப்பணிப்புடன் செயலாற்றும் அரச உத்தியோகத்தர்களுக்கு எதிராக சமூக ஊடகங்களில் கருத்துகளைப் பரப்பும் நபர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

குற்றப்புலனாய்வுத் திணைக்களம் மற்றும் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் இது தொடர்பில் பதில் பொலிஸ்மா அதிபர், ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கமைய, போலியான கருத்துக்களை வெளியிடுவது, ஆரோக்கியமற்ற காணொளிகளை பதிவேற்றம் செய்யும் நபர்களைக் கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு அவர் பணிப்புரை விடுத்துள்ளார்.

கண்ணீர் காணிக்கை



அமரர் பா. காளீஸ்வரி
16.03.1947 - 31.03.2020



படம்1



படம்2

# தினம் ஒரு தலைப்பு

மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்

## சித்திரப்போட்டி

**படம்1**
வரைந்தவர்
மயூரன் தேனுகா – தரம் 10
யா/ வேலணை மத்திய கல்லூரி

**படம் 2**
வரைந்தவர்
அரவிந்தன் அபர்நாத்
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு – ‘மழைக் காலம்’



நேற்றைய தினம் அதிகளவான மாணவர்கள் ‘இயற்கை அன்னை’ எனும் தலைப்பில் சித்திரங்களை வரைந்து அனுப்பியிருந்தனர். தரமான அனைத்தையும் பிரசுரிக்க முடியாததால் மேலதிகமாக தெரிவுசெய்யப்பட்ட சித்திரங்களை வரைந்தவர்களது பெயர் விவரம் மாத்திரம் பிரசுரிக்கப்படுகிறது.

ராஜன் அஸ்வின் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

ஐங்கரன் ஆரணி - தரம் 4
யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை

வ. காசினி - தரம் 2
யா/ மானிப்பாய் மகளிர் கல்லூரி

துளசிகா - தரம் 9
யாழ். இந்து மகளிர் கல்லூரி

அ. க. ரிஷாளன் - தரம் 11
யா/ பரியோவான் கல்லூரி

சுந்தரலிங்கம் பிரவீன் - தரம் 10
யா/ மீசாலை வீரசிங்கம் வித்தியாலயம்

டி. அபிலேஷ் - தரம் 10
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

எஸ். அக்ஷன்யா - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

எஸ். ஹரினி - தரம் 2
யா/ புனித டொன் பொஸ்கோ வித்தியாலயம்

பா. தனுபன் - தரம் 6
யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

பி. பார்கவி - தரம் 6
யா/வடமராட்சிமத்தியமகளிர்கல்லூரி

வசந்தரூபன் அபின் - தரம் 3
சாவகச்சேரிஇந்துஆரம்பப்பாடசாலை

சி. சிவகலை - தரம் 4
யா/இடைக்குறிச்சி சிறி சுப்பிரமணிய வித்தியாலயம்

பாஸ்கரன் சதுர்ஜன் - தரம் 10
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி

த. சம்யுக்தா - தரம் 3
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

த. சுதந்திரா - தரம் 6
யா/ சுண்டுகுளி மகளிர் கல்லூரி

த. ஆரூன் - தரம் 2
யா/ வதிரி வடக்கு மெ. மி. த. க. பாடசாலை

செந்தூரன் அபிஷ்கன் - தரம் 4
யா/மாணிக்கவாசகர் வித்தியாலயம், கரவெட்டி

செந்தூரன் அக்ஷயா - தரம் 6
யா/ மெதடிஸ்ட் மகளிர் உயர்தரப் பாடசாலை, பருத்தித்துறை

லோ. நித்திலா - தரம் 4
யா/ இந்து ஆரம்பப் பாடசாலை

முரளிதரன் வாசவி - தரம் 7
வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்

தி. கோவேழிலன் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

டி ஹரிஷ்மன் - தரம் 8
யா/ புனித பத்திரிசியார் கல்லூரி

ஜெயரூபன் ஹரிஷ் - தரம் 8
கொழும்பு றோயல் கல்லூரி

இ. சிந்தூரிக்கா - தரம் 2
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

லோ. சிவயானு - தரம் 7
யாழ். இந்து மகளிர் கல்லூரி

கு. ஆதிகேசவன் - தரம் 10
யா/ ஹாட்லிக் கல்லூரி

வ. அபிநயம் - தரம் 4
யா/ புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்

பா. ஹரிஷ் - தரம் 4
யா/ நல்லூர் பெனடிக்ற் றோ. க. வித்தியாலயம்



# தெற்கில் சிக்கியுள்ள வடக்கு மக்களை சொந்த இடத்துக்கே அனுப்ப வேண்டும்

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன் கோரிக்கை

கொரோனா அச்சுறுத்தல் காரணமாக நாடுமுழுவதும் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு அந்தப் பரவலைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கை வரவேற்கத்தக்கதாகும். இந்த நடவடிக்கை காரணமாக வடபகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள் தென் பகுதியில் தங்கியிருக்கும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இவ்வாறு தங்கியிருக்கும் வடபகுதியைச் சேர்ந்தவர்களை அப்பகுதிக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்க வேண்டியது அவசியம் என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரும் யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான திருமதி விஜயகலா மகேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.



இதுகுறித்து கருத்துத் தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியவை வருமாறு:-

கொரோனா தாக்கத்தை அடுத்து ஊரடங்குச் சட்டம் தொடர்ந்தும் அமுலில் உள்ளமையினால் தென்பகுதியில் வடபகுதியைச் சேர்ந்த ஆயிரக்கணக்கனாவர்கள் மீண்டும் தமது சொந்த ஊருக்குத் திரும்ப முடியாமல் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்து வருகின்றனர். இத்தகையவர்களை ஏதாவது ஒரு வழிமுறையின் கீழ் சொந்த இடங்களுக்கு மீள அனுப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கொரோனா தொற்றினைத் தடுப்பதற்காக மாவட்டத்துக்கு மாவட்டம் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. ஆனாலும் தென்பகுதியில் இவ்வாறு தங்கியுள்ளவர்களை பரிசோதனைகளின் பின்னாவது தமது சொந்த இடங்களுக்கு அனுப்பிவைக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இவ்வாறு தங்கியுள்ள பலர் எம்முடன் தொடர்பு கொண்டமையை அடுத்து அந்த விடயம் தொடர்பில் அரசாங்கத்தரப்பினருடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டேன். அவர்களை சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளேன். – என்றார்.

# ஊரடங்கின் போதும் வீட்டுக்குள் புகுந்து தந்தை – மகன் மீது கோரத் தாக்குதல்!

## கொடிகாமத்தில் நடந்த கொடூரம்

ஊரடங்கு சட்டம் அமுலில் இருந்த நிலையில் யாழ்.கொடிகாமம் பகுதியில் இரு வீட்டாருக்கிடை யில் உருவான வாய்த்தர்க்கம் மோதலாக முடிந்தது.

இதில் ஒரு தரப்பில் தந்தையும், மகனும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கொடிகாமம் சந்தை வீதியில் கடந்த திங்கட்கிழமை மாலை இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் செ.லோகேஸ்வரன் (வயது- 45) மற்றும் அவரது மகன் லோகேஸ்வரன் மதுசன் (வயது - 20) ஆகியோருடன் இரு பெண்களும் காயமடைந்தனர்எனவும் தெரிவிக்கப்படுகிறது.

வாய்ச் சண்டை கைகலப்பாக மாறி, குழுமோதலாக உருவெடுத்த நிலையில் வீடு புகுந்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பில் கொடிகாமம் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து காயமடைந்த இருவரையும் பொலிஸார் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்த்ததுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டுள்ளனர்.

# மட்டக்களப்புச் சிறையிலிருந்து 19 நபர்களுக்கு நேற்றுப் பிணை

மட்டக்களப்பு சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த 19 சிறைக்கைதிகள், நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்று, மட்டக்களப்பு சிறைச்சாலை அத்தியட்சகர் எஸ்.எல்.விஜயசேகர தெரிவித்தார்

சிறைச்சாலை அத்தியட்சகரின் பணிப்புரைக்கு அமைவாக, சிறுகுற்றங்கள் புரிந்த நிலையில், சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ள சிறைக்கைதிகள், நீதவான்களின் உத்தரவுக்கு அமைய பிணையில் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் முதற்கட்டமாக, 162 சிறைக்கைதிகள், கடந்த திங்கட்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்நிலையில், இரண்டாங்கட்டமாக 19 பேர் நேற்றுப் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். மட்டக்களப்பு சிறைச்சாலையிலிருந்து இதுவரை 181 சிறைக்கைதிகள், பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.











## வெளிநாட்டவர்களின் விசாக்கள் நீடிப்பு

இலங்கையில்உள்ளஅனைத்துவெளிநாட்டவர்களுக்குமான அனைத்து வகையான விசாக்களும் எதிர்வரும் மே மாதம் 12 ஆம் திகதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று குடிவரவு,குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் தொடர் ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், வெளிநாடு செல்வதற்கான விமான சேவைகள் பலவும் ரத்துச் செய்யப்பட்டுள்ள பின்னணியில் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள பசுமை ஊடக இல்லம் (தனி) வரை. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.04.2020 இல் வெளியிடப்பெற்றது.